# சோஷலிஸம்

ஒக்டோபர் 10
1979
சோவியத் மாசிகை

## தத்துவமும் நடைமுறையும்

பாட்டாளி வர்க்க சர்வதேசியமும்
நவீன உலகும்

★

ஐக்கிய முன்னணி

★

ஜனநாயகக் [illegible]
சோஷலிஸ நிர்மாணமும்

★

கலோனியலிஸத்தின் எச்சசொச்சங்களைக்
கடந்து செல்லும் வழி[illegible]

10 (46) 1979

# சோஷலிஸம்

## தத்துவமும் நடைமுறையும்

சோவியத் சித்தாந்த அரசியல் பத்திரிகைகளின் மாதாந்த மஞ்சரி

நொவஸ்தி செய்தி ஸ்தாபனத் தயாரிப்பு

27, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்த, கொழும்பு 7 லுள்ள சோவியத் சோஷலிஸக் குடியரசுகள் ஒன்றிய தூதரகத் தகவல் பிரிவின் தலைவர் இகோர் வி. ஷுலோவ் அவர்களால் கொழும்பு-10, 93, மாளிகாகந்த ரோட், மருதானையிலுள்ள பிரகதி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| இன்றைய விவகாரங்கள் | சாண்டினிஸம்: வேலைத் திட்டமும் செயற்பாடும் | 05 |
| | ஏ. உஸ்த்யுகோவ்<br>பயங்கரமான ஒரு போக்கு | 07 |
| மார்க்ஸியம்—லெனினியமும் எமது காலமும் | பாட்டாளி வர்க்க சர்வதேசியமும் நவீன உலகும் | 09 |
| | யூ. போயேவ்<br>ஐக்கிய முன்னணி | 14 |
| வரலாறும் அனுபவமும் | வலேரியா செலுன்ஸ்காயா<br>லெனினது கூட்டுறவுத் திட்டமும் கட்சியும் | 21 |
| | ஏ. கர்பென்கோ, எல். பெகார்ஸ்கி<br>சோஷலிஸ திட்டமிடலின் சர்வதேச பண்புக்கூறு | 26 |
| சோவியத் சமுதாயம்-வாழ்வும் பிரச்னைகளும் | கொன்ஸ்தான்தின் செர்னென்கோ<br>ஜனநாயக மத்தியத்துவம்—கட்சியின் ஸ்தாபனக் கோட்பாடு | 29 |
| | விளதிமிர் லூட்ஸ்கி<br>இலட்சக்கணக்கானோரை பயிற்றுவித்த பள்ளி | 35 |
| | இளம் கம்யூனிஸ்ட் கழகம்-இன்று | 37 |
| | எமது சுலோகம் சர்வதேசியம் | 38 |
| சோஷலிஸமும் இன்றைய உலகும் | ஒலெக் பொகொமலேவ்<br>ப. பொ. உ. க.வும் வளரும் நாடுகளும் | 41 |
| | ஏ. ஷிதானோவ்<br>ஜனநாயகக் கட்சிகளும் சோஷலிஸ நிர்மாணமும் | 47 |
| வளர்முக நாடுகளின் இன்றைய பிரச்னைகள் | ஜியோர்ஜி ஷஹ்னா ஸாரோவ்<br>கலோனியலிஸத்தின் எச்சசொச்சங்களைக் கடந்து செல்லும் வழிமார்க்கம் | 51 |
| ஏகாதிபத்தியத்தின் சுயரூபம் | கென்னடி நிகோலயேவ்<br>ஆயுதப் போட்டி சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு தடை | 59 |
| | ஏ. கால்கின்<br>1970ம் ஆண்டுகளில் நவ பாஸிசம் | 61 |

# சான்டினிஸம்: வேலைத்திட்டமும் செயற்பாடும்

1979 ஜுலை மாதத்தில் சோமோஸாவின் கொடுங்கோல் அரசாங்கம் நிகரகுவா தேசபக்த படையினரிடம் தோல்வியடைந்தது. இந்த ஆயுதப் போராட்டத்துக்கு சான்டினோவின் பெயரைக் கொண்டுள்ள தேசிய விடுதலை முன்னணி தலைமை தாங்கியது. சான்டினிஸ்ட் தேசிய விடுதலை முன்னணியின் வரலாற்றையும் போராட்டத்தையும் விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கம்.

## சான்டினிய தேசிய விடுதலை முன்னணியின் ஆரம்பம்

லத்தீன் அமெரிக்க நாடுகளின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் அழியா இடத்தைப் பெற்றுள்ள அகஸ்ரோ செஸார் சான்டினோ 1926 முதல் 1933 வரை தனது நாட்டை ஆக்கிரமித்திருந்த அமெரிக்கத் துருப்புகளுக்கு எதிராக வீரமிக்க போராட்டத்தை நடத்தியவர்.

ஒரு விவசாயியின் மகனான சான்டினோ ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான யுத்தத்தின் போதே இராணுவ நடவடிக்கையின் அரிச்சுவடியைக் கற்றுக்கொண்டார். ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை பெறும்வரை போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதே தனது தேசபக்தக் கடமை என அவர் கருதினார். அவரது புகழ் லத்தீன் அமெரிக்காவின் எல்லைகளுக்கு அப்பாலும் பரவியது. 1929இல் அவர் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான லீக்கின் பொதுச்சபையினது நிர்வாகக் குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். கடந்த ஜுலை மாதத்தில் சோமோஸா சென் விடுத்த பணிப்புரையின் பேரில் 1934 பெப்ரவரி 21ந் திகதி சான்டினோ கொலை செய்யப்பட்டார்.

மிலேச்சத்தனமான அப் படுகொலையோ, அல்லது துக்ககரமான அச் சம்பவத்தைத் தொடர்ந்து வந்த நாற்பத்தைந்து வருட இடைவெளியோ சான்டினோ தொடக்கிவைத்த பணியைப் பலவீனப் படுத்தவில்லை.

1959 ஜுன் மாதத்துக்கும் 1960 நவம்பர் மாதத்துக்குமிடையில் சர்வாதிகாரியின் தேசிய காவல் படையினருக்கு தேசபக்த கொரில்லாக்களுக்குமிடையில் உக்கிரமான சண்டை இடம் பெற்றது. பொருளாதார, அரசியல் நெருக்கடிகளிலிருந்து நிகரகுவா மக்களை விடுவிப்பதுவே கொரில்லாக்களின் லட்சியமாகும். அரசாங்கத்தின் சித்திரவதைகளையும் கொடுமைகளையும் பொருட்படுத்தாமல் விவசாயிகளும், தொழிலாளர்களும், மாணவர்களும், புத்திஜீவிகளும், சான்டினிஸ்ட் இயக்கத்தின் சிவப்பு—கறுப்பு இருவர்ணப் பதாகையின் கீழ் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு கொரில்லாக்களுடன் இணையத் தொடங்கினர். சிதறுண்டிருந்த கொரில்லாக் குழுக்களை ஐக்கியப்படுத்தும் பணி 1961 ஜுன் மாதமளவில் பூரணத்துவமடைந்தது. விடுதலைப் போராளிகள் அனைவரும் சான்டினிய தேசிய விடுதலை முன்னணி என்ற பெயரில் ஒரே அமைப்பின் கீழ் அணிதிரண்டு கார்லொஸ் பொன்சேக அமடோரை அம் முன்னணியின் செயலாளர் நாயகமாகத் தெரிவு செய்தனர்.

1967க்கு முற்பட்ட காலத்தில் ஆயுதப் போராட்டத்திற்கான களங்களைக் கிராமப்புறங்களில் அமைப்பதிலேயே முன்னணி கூடுதலான கவனம் செலுத்தியது. புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு யுத்தப் பயிற்சி அளிப்பதற்கும், அரசாங்கப்படையுடன் இடம் பெறவுள்ள போராட்டத்தின்போது பின்பற்ற வேண்டிய தந்திரோபாயங்களைக் கற்றுக் கொடுப்பதற்கும் மதல்கபா பிரதேசத்தில் நான்கு கொரில்லாக் கல்லூரிகள் அமைக்கப்பட்டன. 1967ம் ஆண்டு இப் பிரதேசத்தில் வெடித்த போராட்டம் ஏனைய பிரதேசங்களிலுள்ள விடுதலை முன்னணியினருக்கு ஒரு சமிக்ஞையாகவும் தேசத்தின் வரலாற்றில் புதிய அத்தியாயமொன்றன் தொடக்கமாகவும் அமைந்தது.

## போராட்ட வேலைத்திட்டம்

தேசிய விடுதலை முன்னணி அதன் விரிவான வேலைத்திட்டத்தை 1969ம் ஆண்டு பிரகடனப்படுத்தியது. தேசிய விடுதலை முன்னணி ''ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதையும், சர்வாதிகார அரசாங்கத்தின் இராணுவ, துரைத்தன அமைப்புகளைத் தகர்த்தெறிந்து தொழிலாளர் விவசாய மக்களின் ஐக்கியத்தைப் பலமான அடிப்படையாகக் கொண்டதும், தேசத்தின் சகல தேசாபிமான,

ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளினதும் பங்களிப்பைப் பெறுவதுமான புரட்சிகர அரசாங்கமொன்றை அமைப்பதையும் இலக்காகக் கொண்டுள்ள இராணுவ—அரசியல் இயக்கம்'' என அவ் வேலைத்திட்டம் பிரகடனப்படுத்தியது. பொருளாதார, கலாசார, வெளிவிவகாரக் கொள்கைகளையும் அது தெளிவாக உள்ளடக்கியது. அமெரிக்க ஏகபோகங்களினதும், சோமோஸா குடும்பத்தினதும் சொத்துகளைத் தேசவுடைமையாக்கல், இயற்கை வளங்களின் மீதும் வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதும் தேசத்தின் கட்டுப்பாட்டை ஏற்படுத்துதல், வாரக்குத்தகை முறையை நீக்கி நிலச்சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துதல், விவசாய நிலங்களை விவசாயிகளுக்குப் பங்கிட்டளித்தல் போன்றவை பிரகடனப்படுத்தப்பட்ட கொள்கைகளுள் சிலவாகும்.

வெளிவிவகாரக் கொள்கையைப் பொறுத்த வரையில், நிகரகுவாவின் சுதந்திரத்திற்கும் இறைமைக்கும் மதிப்பளிக்கும் சகல நாடுகளுடனும் புரட்சிகர அரசாங்கம் உறவை ஏற்படுத்திக்கொள்ளும் என வேலைத்திட்டத்தில் கூறப்பட்டிருந்தது.

## புதிய அத்தியாயம்

சான்டினிய தேசிய விடுதலை முன்னணியின் நடவடிக்கைகளில் 1970 இன் ஆரம்பத்தில் ஒரு உத்வேகம் ஏற்பட்டது. இச் சந்தர்ப்பத்தில் நிகரகுவா கம்யூனிஸ்டுகள் மகத்தான முறையில் செயற்பட்டனர். அரசியல் அதிகாரத்தைத் தொடர்ந்து வைத்திருப்பதற்காக சோமோஸாவினல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அரசாங்கத்துக்கு எதிரான இயக்கத்தை மேலும் வலுப்படுத்தியதுடன் ஆளும் கட்சிகளிலேயே பிளவை ஏற்படுத்தின. இந்நிலையில் தேசிய முதலாளி வர்க்கத்தின் பெரும் பகுதியினரும் மதபீடங்களும் சோமோஸாவைப் பகிரங்கமாக எதிர்க்கத் தொடங்கின.

இதனல் அடக்குமுறை மேலும் அதிகரித்தது. 1975 ஜனவரியில் அரசியல் சாசனரீதியான பாதுகாப்புகள் அனைத்தும் நீக்கப்பட்டதுடன் அவசரகாலநிலையும் பிரகடனப்படுத்தப்பட்டது. நடைமுறையிலிருந்த தண்டனை வழங்கும் அமைப்புகளுக்கு மேலதிகமாக நிரந்தர இராணுவ நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. கொரில்லாக்களுக்கு ஆதரவானவர்கள் என்ற மேலோட்டமான சந்தேகத்தின் பேரிலேயே பல விவசாயிகள் சித்திரவதை முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர்.

சோமோஸாவினது அரசாங்கத்தின் எதிர்காலத்தையிட்டு ஏற்பட்ட அச்சம் காரணமாக அமெரிக்கா கொரில்லாக்களை அடக்குவதற்கு 25 லட்சம் டாலர் கடன் வழங்கியது.

சர்வாதிகாரியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை எனவும் சர்வாதிகாரத்தை ஒழித்து நிகரகுவாவின் அனைத்து மக்களதும் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கத்தக்க ஜனநாயக அரசாங்கமொன்றை அமைப்பதற்கான போராட்டத்தில் தேசத்தின் சகல தேசாபிமான, புரட்சிகர சக்திகளையும் ஐக்கியப் படுத்தும் வகையில் பரந்த சோமோஸா எதிர்ப்பு முன்னணியொன்று அமைக்கப்படுதல் வேண்டும் எனவும் சான்டினிய தேசிய விடுதலை முன்னணி 1978 ஜனவரியில் பிரகடனமொன்றை வெளியிட்டது. சோமோஸா குடும்பத்தின் சொத்துகளைச் சுவீகரித்தல், இயற்கை வளங்களைச் சுரண்டும் சகல ஸ்தாபனங்களையும் தேசியமயமாக்கல், உண்மையான விவசாய, நகரப்புறச் சீர்திருத்தங்கள், வங்கிகளைத் தேசியமயமாக்கல், தேசிய காவல்படையைச் சுத்திகரித்தல், தொழிற்சங்கங்களும் அரசியல் ஸ்தாபனங்களும் பூரண சுதந்திரத்துடன் இயங்குவதற்கான உரிமையை அங்கீகரித்தல் ஆகிய பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமென அப்பிரகடனத்தில் கூறப்பட்டது.

சான்டினிய தேசிய விடுதலை முன்னணியின் தலைமையில் நிகரகுவா மக்கள் நடத்திய நீதியான போராட்டம் 1979 ஜூலை மாதத்தில் வெற்றியீட்டியது. நிகரகுவாவின் புதிய அரசாங்கம் மக்களின் நலனுக்காகப் பல முற்போக்கான ஜனநாயக மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஏ.உஸ்த்யுகோவ்

# பயங்கரமான ஒரு போக்கு

நவம்பர் 1977 ல் எகிப்திய ஜனாதிபதி சதாத் ஜெருசலத்திற்குச் சென்று, தனிப்பட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தி அரபு நாடுகளை இஸ்ரேலின் கோரிக்கைகளுக்கு அடிபணியச் செய்தார்.

அவர் அப்படி அரபு நாடுகளின் நலன்களைச் காட்டிக் கொடுத்தது தற்செயலானதா? பதவிக்கு வந்தவுடன் அவர், தேசத்தின் முற்போக்கு சமூக-பொருளாதார சீர்திருத்தக் கொள்கையை கைவிட்டார், தேசிய விமோசன இயக்கங்களை ஆதரிப்பதன் பொருட்டு ஏகாதிபத்திய சதிகளுக்கெதிரான போராட்டத்தை உதாசீனப்படுத்தினார், 1952 புரட்சியின் பின் ஜனாதிபதி நாஸரின் தலைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்த கொள்கைகளை சிதறடித்தார் என்பதை நாம் மறப்பதற்சில்லை. எனவே முற்போக்கான அரபு நாடுகளுடனான ஒத்துழைப்பை அமெரிக்கா, மற்றும் ஏனைய ஏகாதிபத்திய சக்திகளின் நலன்களுக்கேற்ப சதாத் நிறுத்திக் கொண்டார்.

மத்திய கிழக்கு சம்பந்தமானதோர் கூட்டு அறிக்கை 1977 அக்டோபர் 1ஆம் திகதி சோவியத் யூனியனாலும் அமெரிக்காவாலும் வெளியிடப்பட்டது. மத்திய கிழக்கு பிணக்கைத் தீர்ப்பதற்கு இத்தஸ்தாவேஜு நல்லதோர் அடிப்படையாயிருக்குமென உலகத்தோர் நம்பினர்.

## தீவிரமான கண்டனம்

இன்று, உண்மைக்கு மாறாக எகிப்து—இஸ்ரேல் ஒப்பந்தம் தனிப்பட்ட ஒன்றல்ல, அது அதிகபட்ச சாதகங்களை அரபு மக்களுக்கு ஏற்படுத்துகிறது என்று கூறுகிறார்கள். அப்படியானால் எகிப்து—இஸ்ரேல் விவகாரம் அமெரிக்க கேடயத்திற்குள் நடத்தப்பட்டதை அரபு நாடுகள் கடுமையாகக் கண்டித்ததேன்? ஏகாதிபத்தியத்தின் சுரண்டல்தனமான, தேசங்களை நசுக்கும் பிரயத்தனங்கள்தான் காரணம்.

1979 மார்ச் 12—13 ஆம் திகதிகளில் பாக்தாத்தில் (ஈராக்) நடந்த அரபு வெளிநாட்டு மற்றும் பொருளாதார அமைச்சர்கள் மாநாட்டுத் தீர்மானங்கள் இப்போது நடைமுறைப் படுத்தப்படுகின்றன. எகிப்திய ஆட்சியைத் தனிமைப்படுத்துவதை ஆழப்படுத்துவதற்கான புதிய தனிப்பட்டமற்றும் கூட்டு நடவடிக்கைகளை அரபு நாடுகள் மேற்கொள்கின்றன. ஜோர்தானும் சவூதி அரேபியாவும் ஒப்பந்தத்தை எதிர்த்ததோடு எகிப்து, அமெரிக்க தலைவர்களை (ஆராயாமலே) ஏற்றுக்கொள்ளும் நாடுகளுமிருந்தன.

தொடர்ந்து—அரபு லீக் அங்கத்துவ நாடுகளனைத்தும் எகிப்துடனன ராஜதந்திர உறவுகளை முறித்துக் கொண்டது சதாத் ஆட்சிக்குப் பேரடியாயிற்று ஐக்கிய அரபு எமிரேட் குவாடார் குவைத் சவூதி அரேபியா என்பன எகிப்திற்கான நிதியுதவிகளை நிறுத்தின (ஏனைய எண்ணெய் உற்பத்தி நாடுகள் இதை ஏற்கெனவே செய்தன) கடந்த ஐந்தாண்டுகளில் அரபு நாடுகளிலிருந்து 1700 கோடி டாலர்கள் வரை நிதியுதவியை கெய்ரோ பெற்றதை மறப்பதற்கில்லை.

அணிசேரா இயக்கத்தாலும் இந்த தனிப்பட்ட ஒப்பந்தம் கண்டிக்கப்படுகிறது.

மொரொக்கோவில் மே மாதத்தில் நடந்த இஸ்லாமிய காங்கிரஸ் அங்கத்துவ நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களின் மாநாட்டு தீர்மானங்களும் அரபு நாடுகளின் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துகின்றன.

1967 ல் அடையத் தவறியதை இஸ்ரேல் அடைந்துள்ளது. ஒப்பந்தத்தால் எகிப்து சமதையற்ற தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எல்லை சம்பந்தமாக அது குறைந்த உரிமைகளையே கோருகிறது.

பெகின் திட்டம் இப்போது இஸ்ரேலில் நடைமுறைப் படுத்தப்படுகிறது. 1977 டிசம்பரில் அத்திட்டம் வாதிக்கப்பட்டபோது எகிப்திய ஜனதிபதி அதை ஆதரிக்க நினைத்ததில்லை. ஆனல் தனது சரணகதிப் போக்கில் 1978 செப்டம்பரில் காம்ப் டேவிட் தஸ்தாவேஜில் (இது பெகின் திட்டத்தின் பிரதான விதிகளை கொண்டதாகும்) கைச்சாத்திட்டார்.

தனிப்பட்ட ஒப்பந்தங்கள் மத்திய கிழக்கை ஆபத்தில் தள்ளிவிடும் என ஆரம்ப முதலே எச்சரித்து வந்த சோவியத் யூனியன் மத்திய கிழக்குப் பிரச்னை தீர்வின் எதிரிகளின் சதித்திட்டத்தையிட்டு எச்சரிக்கிறது எனவே அரபு நாடுகளுடனன ஒருமைப்பாட்டை பலப்படுத்துவதே முதற் கடமை என்கிறது. மத்திய கிழக்கில் நீதியும் சமாதானமும் நிலவ வேண்டுமென விரும்புவோருடன் அன்று போல் என்றும் ஒத்துழைக்க சோவியத் யூனியன் எந்நேரமும் தயாராயிருக்கிறது.

# பாட்டாளி வர்க்க சர்வதேசியமும் நவீன உலகும்

மனித சமுதாயத்தின் வளர்ச்சியில் பாட்டாளிவர்க்க சர்வதேசியம் ஒரு புறநிலைப் போக்காகும்: அனைத்துத் தேசமக்களும் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் ஐக்கியப்படுதல் வேண்டும் என்ற சிந்தனைக்கு அது வடிவம் கொடுக்கின்றது.

## பிரதான கோட்பாடு

பாட்டாளிவர்க்க சர்வதேசியம் என்பது புரட்சிகர சித்தாந்தத்தின் பிரதான கோட்பாடு எனவும், சோஷலிசத்தின் சமூக லட்சியம் எனவும் பாட்டாளி வர்க்கத்தினது வர்க்கப் போராட்டத்தின் மிக முக்கியமான விதி எனவும், தொழிலாளி வர்க்கத்தின் வீரியமான தத்துவார்த்த, நடைமுறை ஆயுதம் எனவும் விஞ்ஞான சோஷலிசத்தின் ஸ்தாபகர்களான கார்ல் மார்க்ஸும் பிறெடெரிக் ஏங்கெல்ஸும் வரையறுத்துள்ளனர்.

ஏகாதிபத்தியக் காலகட்டத்தில்—விசேடமாக 1917 அக்டோபர் சோஷலிஸப் புரட்சியை அடுத்து வந்த காலங்களில் லெனினின் எழுத்துகள் மூலமாகவும் பாட்டாளிவர்க்க சர்வதேசியம் மேலும் வளர்க்கப்பட்டும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் தவறற்ற தன்மையையும் உகந்த தன்மையையும் லெனினிஸத்தின் வரலாற்றிலிருந்து அறியமுடியும். சோவியத் யூனியனது வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் சோவியத் அரசின் சகல இனங்களும் சோஷலிசத்தையும் கம்யூனிஸத்தையும் நோக்கிச் செல்லும் பயணத்தின் சித்தாந்த, அரசியல் அத்திவாரமாக மார்க்சிஸம் லெனினிஸமே அமைந்திருந்தது.

## சோஷலிஸப் புரட்சியின் விசேட அம்சம்

சர்வதேசியம் மார்க்சிஸ லெனினிஸக் கட்சியொன்றின் இயல்பான விசேடாம்சம் என வரையறுத்துக் கூறுகையில், சமூக உற்பத்தியில் தொழிலாளி வர்க்கம் வகிக்கும் பாத்திரத்தின் புறநிலைத் தன்மை, அது நடத்தும் போராட்டத்தின் குணும்சம், சோஷலிசப் புரட்சியை நிறைவேற்றுகையில் உருவாகும் சூழ்நிலைகள் ஆகியவற்றினுலேயே பாட்டாளி வர்க்கக் கட்சியொன்றின் சர்வதேசியக் குணும்சம் நிர்ணயிக்கப்படுகின்றது என்பதைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும். பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்பது சோஷலிஸப் புரட்சியினதும் சோஷலிஸ நிர்மாணத்தினதும் ஒரு விதி என்றே கம்யூனிஸ்டுகள் கருதுகின்றனர்.

ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டம் விரிவடைந்து வருகின்றதென்பதைக் கவனத்திற் கொள்ளல் முக்கியமானது. உலகப் புரட்சிகர இயக்கங்களால் பெறப்படும் ஒவ்வொரு வெற்றியும் கம்யூனிஸ்டுகளின் முன்னணிப் பாத்திரத்துக்குச் சாட்சிகளாகின்றன. உலகில் இடம்பெறும் பிரதான மாற்றங்கள் அனைத்தும் கம்யூனிஸ நடவடிக்கைகளுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் புரட்சிகரத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் நலன்களை ஆதரித்து நிற்பதிலும் ஏகபோக ஆட்சியை எதிர்ப்பதிலும் கம்யூனிஸ்டுகளே பிரதான அரசியல் சக்தியாக உள்ளனர்.

தேசிய விடுதலை இயக்கங்களில் கம்யூனிஸ்ட் கட்சிகள் முக்கிய இடத்தை வகித்துள்ளன. புதிதாகச் சுதந்திரமடைந்த நாடுகளின் உழைக்கும் மக்கள் பூரண சுதந்திரத்திற்காகவும், பொருளாதார, கலாசார மேம்பாட்டிற்காகவும், நவகலோனியலிஸத்தின் சகல வடிவங்களுக்கும் எதிராகவும் நடத்தும் போராட்டத்திற்குக் கம்யூனிஸ்டுகள் அளிக்கும் ஆதரவிலிருந்து அவர்களது சர்வதேசியத் தன்மை தெளிவாகின்றது.

ஏகாதிபத்தியத்தின் இராணுவப் பயமுறுத்தல்கள் ஒருமைப்பாட்டின் தேவையை ஏற்படுத்துகின்றன. சோஷ

லிஸ நாடுகளும் உலகளாவிய உழைக்கும் மக்களும் நடத்திவரும் அயராத போராட்டங்கள் சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளன. இந்த வாய்ப்புகளைச் சரிவரப் பயன்படுத்துவதற்கு வெகுஜன இயக்கங்கள் வேண்டும் என்பதனுல் தொழிலாளி வர்க்கத்துக்கும் ஏகாதிபத்திய நடவடிக்கைகளை முறியடிக்கத்தக்க சகல ஜனநாயக முற்போக்குச் சக்திகளுக்குமிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்குக் கம்யூனிஸ்டுகள் உழைத்து வருகின்றூர்கள். உலகத் தொழிலாளரின் ஐக்கியம் யுத்தத்தை நிரந்தரமாக ஒழித்துவிடும் என்று கார்ல் மார்க்ஸ் கூறிய அக்காலம் இன்னும் வரவில்லை, ஆனுல், மிக விரைவில் அந்த நிலையை ஏற்படுத்துவதற்காக உலகம் பூராவிலுமுள்ள சோஷலிஸ, கம்யூனிஸ்ட் இயக்கங்கள் அயராது உழைத்து வருகின்றன,

## தேசிய, சர்வதேசியக் கடமைகளின் ஐக்கியம்

தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தில் தேசிய, சர்வதேசியக் கடமைகளுக்கிடையே இணைப்பு இருக்க வேண்டிய அவசியத்தைப் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் வலியுறுத்துகின்றது. துரதிர்ஷ்டவசமாக, இப்பிரதான அம்சம் இன்று பல சந்தர்ப்பங்களில் தவறுக அர்த்தங்கற்பிக்கப்படுகின்றது. தேசியத் தன்மைகளைக் கவனத்துக்கெடுக்க வேண்டும் என்பது கூடுதலாக வலியுறுத்தப்படுகின்ற அதே நேரத்தில் ஒவ்வொரு கட்சியினதும் சர்வதேசியத் தன்மையும் தேசியக் கடமைகளை நிறைவேற்றுவதில் அதன் முக்கியத்துவமும் உதாசீனப்படுத்தப்படுகின்றன.

சர்வதேசியத்தினதும் தேசபக்தியினதும் ஐக்கியத் தன்மையை முதன் முதலாகத் தெளிவுபடுத்திய சித்தாந்தம் மார்க்சிஸம் லெனினிஸமே: சர்வதேசவாதிகளான பாட்டாளி வர்க்கமே ஒரு தேசத்தின் பிரதான தேசபக்த சக்தியாகவுமுள்ளது. தொழிலாளி வர்க்கத்தின் உண்மையான தேசிய சிந்தனைகள் அதே நேரத்தில் உண்மையான சர்வதேசிய சிந்தனைகளாகவுமுள்ளன. தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தேசிய, சர்வதேசிய நிலைகளைப் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் சித்தாந்த ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் வெளிப்படுத்துகின்றது. பாட்டாளி வர்க்கம், தனது மேம்பாட்டுக்கான போராட்டத்துக் கூடாகத் துயருறும் மக்களைச் சோஷலிஸத்தை நோக்கி இட்டுச் செல்வதுடன் தொழிலாளி வர்க்கத்தைத் தேசிய சக்தியாகவும் சர்வதேசிய சக்தியாகவும் வளர்க்கின்றது.

நவீன சகாப்தத்தின் பிரதான வர்க்கமும் தீர்மானகரமான புரட்சிகர சக்தியுமாகிய தொழிலாளி வர்க்கத்தினது சர்வதேச ஒருமைப்பாட்டின் அடிப்படையில் உருப்

பெற்று வளர்ந்து வருவதான கம்யூனிஸ இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பாட்டாளிவக்க சர்வதேசியம் தவிர்க்க முடியாத தேவையாகின்றது. மிகவும் முற்போக்கான வர்க்கத்தின் முன்னணிப் படையினராகையால் கம்யூனிஸ்டுகளே கூடுதலான வகையில் தேசிய நலன்களுக்காகப் போராடுபவர்கள். உழைக்கும் மக்களின் நல்வாழ்வு அவர்களது ஜனநாயகஉரிமைகளையும்சுதந்திரங்களையும் பாதுகாத்தலும் விரிவுபடுத்தலும், தேசத்தின் சுதந்திரத்தை உத்தரவாதப் படுத்தல், மக்களின் நாளாந்த வாழ்வின் அத்தியாவசியமான பிரச்னைகள் தொடர்பாக அவர்கள் போராட்டம் நடத்துகின்றூர்கள்.

தேசிய தனித்துவத் தன்மைகளைக் குறைத்து மதிப்பிடுவது சர்வதேசக் கடமைகளைப் புறக்கணிக்கும் அதே அளவுக்கு ஆபத்தானது. எனினும், கூடுகலாக மதிப்பிடுவது புரட்சிகர சக்திகளையும் பலவீனப்படுத்திப் பிற்போக்கின் நலன்களுக்கு இடமளிப்பதுடன், பூர்ஸுவாச் சக்திகளுக்கு எதிரான போராட்டத்தின் பொதுவான நிலைபாடுகளைத் தளர்ச்சியடையச் செய்து சந்தர்ப்பவாதத்துக்கு இடமளித்துவிடும். உலக கம்யூனிஸ மற்றும் விடுதலை இயக்கங்களின் அனுபவங்களைக் கற்று மதிப்பீடு செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இச்சர்வதேச அனுபவங்களை உதாசீனப்படுத்தவோ குறைத்து மதிப்பிடுதலோ சர்வதேச கம்யூனிஸ இயக்கத்தோடு கட்சிக்குள்ள உறவைப் பலவீனப் படுத்தித் தனிமைப்படுத்துகின்றது.

புரட்சிகர இயக்கத்தின் ஒவ்வொரு தேசியப் பிரிவும் தனது சொந்த நாட்டில் மூலதனத்தின் ஆட்சியை முறியடித்து உழைக்கும் மக்களின் ஆட்சியதிகாரத்துக் கூடாகப் புதியவொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில் முழுமூச்சாக ஈடுபடுவதன் மூலம், உலகம் முழுவதிலும் புரட்சியையும் சோஷலிசத்தையும் ஏற்படுத்தும் பொது நோக்கத்திற்குத் தனது சர்வதேசிய கடமையை நிறைவேற்றுகின்றது. தேசிய சர்வதேசிய கடமைகளின் இணைந்த தன்மையைத் தெளிவு படுத்துகையில், லெனின் பின்வருமாறு கூறுகின்றூர் ''உண்மையான சர்வதேசியம் என்று ஒரேயொரு வகை மாத்திரமே உண்டு. தனது சொந்த நாட்டில் புரட்சிகர இயக்கத்தினதும் புரட்சிகரப் போராட்டத்தினதும் வளர்ச்சிக்காக மனப்பூர்வமாக உழைப்பதும், விதிவிலக்கின்றி ஒவ்வொரு நாட்டிலும் (பிரசாரம், ஆதரவு பொருளுதவி ஆகியவற்றின் மூலம்) இப்போராட்டத்துக்கு ஒத்துழைப்பு நல்குவதுமே அது.''

ஆனல், தேசிய, சர்வதேசிய நலன்களில் மாறுபட்ட நிலைமைகள் ஏற்படும் போது தொழிலாளர்கள் தேசிய ஐக்கியத்திலும் பார்க்க சர்வதேச ஐக்கியத்தையே முக்கியமாகக் கொள்ளல் வேண்டுமென லெனின் வலியுறுத்துகின்றூர். சர்வதேசிய ஐக்கியத்துக்கு முக்கியத்துவம் வழங்

கும் லெனினின் இக்கோட்பாடு புரட்சிகர இயக்கத்தின் எந்தவொரு தேசியப் பிரிவினதும் தேசிய, சர்வதேசிய நிலைபாடுகளில் முரண்பாடு தோன்றத்தக்க சாத்தியக் கூறுகளை இல்லா தொழிக்கின்றது. எனவே, உலக சோஷலிஸப் புரட்சியின் வெற்றிக்காகவும் சோஷலிஸத்தின் பெறு பேறுகளைப் பாதுகாப்பதற்காகவும் நடத்தப்படும் போராட்டமே தமது பிரதான கடமை எனக் கம்யூனிஸ்டுகள் கருது கின்றனர். இது தொழிலாளி வர்க்கத்தின் தேசிய நலன்களுக்கு உடன்பாடானதே தொழிலாளி வர்க்கத்தின் தேசிய, சர்வதேசிய நலன்கள், எந்நிலையிலும், உலக புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்யையே பிரதானமான கடமையாகக் கொண்டுள்ளன.

## புதிய கட்டம்

உலக சோஷலிஸ அமைப்பின் தோற்றத்துடனும், புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்சியுடனும் பாட்டாளிவர்க்க சர்வதேசிய சித்தாந்தத்தையும்நடைமுறையையும் பொறுத்த வரையில் புதிய கட்டமொன்று தோன்றியுள்ளது. பாட்டாளிவர்க்க சர்வதேசியம என்ற கோட்பாட்டின் பிரயோகம் இப்போது அதிகரித்துள்ளது.

உலக சோஷலிஸ அமைப்பு எமது காலத்தின் பிரதான சக்தியாகிய சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்று ரீதியான வெற்றியாகும், சோஷலிஸ சமாஜத்தைச்சேர்ந்த நாடுகளின் சோஷலிஸ ஸ்திரம் பெற்றிருப்பதும் வளர்ந்து வருவதும் முழு உலகிலும் வளர்ச்சிகாமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 1969ம் ஆண்டு இடம் பெற்ற உலகக் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் கூட்டத்தில், பழைய உலகுக்கு எதிரான போராட்டத்தில் புதிய உலகு ஈட்டிய வெற்றிகள் பெருமளவில் சோஷலிஸ அமைப்பு அடைந்த வெற்றிகளது பலாபலன்களே எனச் சுட்டிக் காட்டப்பட்டது,, எனவே உலக சோஷலிஸ அமைப்பை வலுப்படுத்துவதன் மூலம் உலகப் புரட்சிகர இயக்கமும் ஏகாத்திபத்திய எதிர்ப்புப் போராட்டமும் வளர்ச்சியடைகின்றன. சோஷலிஸத்தைப் பாதுகாப்பது கம்யூனிஸ்டுகளின் சர்வதேசக் கடமை என கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

சோஷலிஸத்தின் வளர்ச்சிக்கும், சமாதானத்துக்கும், சுதந்திரத்திற்கும் சர்வதேச ஒத்துழைப்பும் சகோதரத்துவமும் இன்றியமையாததெனக் கம்யூனிஸ்டுகள் கருதுகின்றனர். இவ்வெற்றிப்பாதையில் தொடர்ந்து நடக்க அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

பேராசிரியர் யூ. போயேவ்
விஞ்ஞானக் கலாநிதி-வரலாற்றியல்

# ஐக்கிய முன்னணி

1969 ஆண்டு மாஸ்கோவில் கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மகாநாடு நடைபெற்றதைத் தொடர்ந்த கடந்த ஒரு தஸாப்த காலமானது, இன்றைய சமுதாய வளர்ச்சியின் பிரதான போக்குகள் தொடர்பான மார்க்ஸிய—லெனினிஸ மதிப்பீட்டின் மிகச் சரியான தன்மையினை ருஜூப்பித்துள்ளது.

தனது இழந்துபோன வரலாற்று வழிப்பட்ட பிரயத்தனங்களுக்குப் புத்துயிரளிப்பதோ அன்றி உலக வளர்ச்சிப் போக்கினைத் திசைதிருப்புவதோ ஏகாதிபத்தியத்துக்கு இயலாத காரியமாகி விட்டது. மனிதகுல வளர்ச்சியின் பிரதான மார்க்கம் உலக சோஷலிஸ அமைப்பினாலும் சர்வதேச உழைக்கும் வர்க்கத்தினாலும், புரட்சிகர சக்திகளினாலுமே நிர்ணயிக்கப்படுகின்றது.1 மேற்படி மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய தஸ்தாவேஜுவின் ஒரு வாசகம் இது.1 ''ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தின் இன்றைய கட்டப் பணிகளும், கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளினதும் அனைத்து ஏகாதிபத்திய—விரோத சக்திகளின் ஐக்கியப்பட்ட செயற்பாடும்'' என்ற முக்கிய கோஷம் பத்தாண்டுகளுக்கு முன்னரிருந்ததைப் போன்றே இன்றும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக உள்ளது.

இரு வேறுபட்ட சமூக அமைப்புகளுக்கிடையிலான போராட்டத்துக்கும், விஞ்ஞான, தொழில்நுட்ப புரட்சியினால் ஏற்படக்கூடிய தேவைகளுக்கும் ஏற்ப தன்னைச் சமாளித்துக் கொள்ள முயலும் நவீன ஏகாதிபத்தியத்தின் புதிய தோற்றப்பாடு வழிப்பட்ட நிகழ்வுப் போக்கு தொடர்பான ஒரு விஞ்ஞானபூர்வமான மதிப்பீட்டினை 1969ம் ஆண்டு மகாநாடு முன்வைத்தது.

---

1: சர்வதேச கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் மாஸ்கோ மகாநாடு—1969; ''பீஸ் அன்ட் சோஷலிஸம்'' பிராஹா 1969; பக்கம் 13

விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியானது ''வர்க்க சமரசம்'', ''சேமநல சமுதாயம்'' ஆகியவற்றுக்கு இட்டுச் செல்லக் கூடிய முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கின் ஒரு புதிய கட்டத்துக்குக் கட்டியம் கூறும் என்ற கனவுகளை 1976ம் வருடத்தைய நிகழ்ச்சிகள் பகற்கனவாக்கியுள்ளன. பரவலான வேலையில்லாத் திண்டாட்டம், முற்றிவரும் பணவீக்கம், முதலாளித்துவத்துக்கே உரித்தான நெருக்கடிகள் முனைப்பு பெறுகின்றமை இவைதான் இன்றைய முதலாளித்துவ உலகின் நிலவரங்களாக உள்ளன.

தொடர்ந்து நடைபெறும் விஞ்ஞான, தொழில் நுட்பப் புரட்சியானது முதலாளித்துவத்தின் மாமூல் வழிப்பட்ட பிரச்னைகளை முனைப்பாக்குவது மட்டுமன்றி, புதிய பிரச்னைகள் ஜனிப்பதையும் நடப்பு ரூபபடுத்துகின்றது. ஏகாதிபத்தியத்தினால் உற்பவிக்கப்பட்ட கொடுமைகளை மனித மனச்சாட்சியாலுஞ் சரி, மனோ தர்மத்தினாலுஞ் சரி இனிமேலும் சகிக்கமுடியாது. 700லட்சம் இன்னுயிர்களைப் பலியெடுத்த இரண்டு யுத்தங்களைக் கட்டவிழ்த்துவிட்ட குற்றம் ஏகாதிபத்தியத்தையே சாரும் மிக அழிவுகரமான ஆயுதங்களைக் கைவசம் கொண்டுள்ள ஏகாதிபத்தியத்தினால் ஒரு உலக அணுப்பிரளயம் நிகழும் அபாயமும் உண்டு. இதனால் தான் இவ்வாறான பிரளயம் ஒன்று ஏற்படுவதனைத் தவிர்ப்பதற்கான போராட்டத்துக்கு மேற்படி மகாநாட்டில் முக்கியத்துவமளிக்கப்பட்டது.

வேறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகள் மத்தியிலான சமாதான சக—ஜீவனம் பற்றிய லெனினிஸக் கோட்பாட்டினை முன்வைத்து ஐக்கியப்பட வழியில் செயல்படுவதையே கம்யூனிஸ்டுகளின் முக்கிய பணியாக மகாநாடு வகுத்தளித்தது. சமாதான சக-ஜீவனமானது உலக யுத்தத்தினைக் கட்டவிழ்த்து விடுவதற்கான ஏகாதிபத்திய எத்தனிப்புகளைத் தடுப்பதற்குத் துணை செய்வதுடன், அனைத்து மக்களினதும் அடிப்படை நலன்களுக்கு இயைந்ததாகவும் அமைகின்றது; அதே வேளையில், இது, உலக அரங்கில் ஒன்றினையொன்று பொருதி நிற்கும் இருவேறு சமூக அமைப்புகளுக்கிடையிலான வர்க்கப் போராட்டத்தின் முக்கிய வடிவமாகவும உள்ளது.

சமாதான சக—ஜீவனக் கொள்கையானது, தமது சுயாதீனத்துக்கும் விமோசனத்துக்குமான ஆயுத வழிப்பட்ட அன்றி அமைதி வழிப்பட்ட போராட்டப்பாதையினைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒவ்வொரு மக்களுக்குமுள்ள உரிமையுடன் முரண்படுவதில்லை; அன்றியும், இக் கொள்கையானது பிற்போக்கு ஆட்சிகளுக்கு ஆதரவு

வழங்கப்படுவதற்கும் வகை செய்வதாயில்லை. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக ஆயுதமேந்தித் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்கும், தன து தர்மநியாயமான இலட்சியத்துக்குமற்றைய மக்களின் ஆதரவினைப் பெறுவதற்கும் ஒவ்வொரு இனத்துக்கும் சர்ச்சைக்கிடமற்ற உரிமை உண்டு என்பதில் சந்தேகமில்லை.

## அனைத்து இனங்களினதும் நலன்களின் பேரில்

சோவியத் யூனியனதும், உலக சோஸலிஸ சாமஜத்தினதும் அனைத்து சமாதான நேச சக்திகளின் பிரயத்தனங்களினாலும் புதிய யுத்த அபாயம் தணிக்கப்பட்டு வந்துள்ளது. ஐரோப்பிய பாதுகாப்பு-ஒத்துழைப்பு மகாநாடு (1975) கடந்த தஸாப்தகாலத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்தது. சர்வதேச வளர்ச்சி மார்க்கத்தின் பிரதான போக்குகளாக மாறியுள்ளன. அரசியல் வழிப்பட்ட இணக்க அமைதியுடன் இராணுவ வழிப்பட்ட இணக்க அமைதியினை எய்துவதற்கும் சமாதானத்துக்குப் பேரபாயமாகவுள்ள ஆயுதப் போட்டியினை முடிவுக்குக் கொண்டு வரவும் சோவியத் யூனியன் இதர சோஷலிஸ நாடுகளுடன் இணைந்து நின்று தீவிரமாகப்பாடுபடுகின்றது.

இவ்வகையில், 1979 ஜூன் 18ல் சோ.க.க மத்திய கமிட்டிப் பொதுச் செயலாளரும் சோ.சோ.கு.ஒ.சுப்ரீம் சோவியத் தலைமைக் குழு முதல்வருமான லியோனித் பிரஷ்னேவுக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி காட்டக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. இப்பேச்சுவார்த்தைகளின் பயனால் கேந்திரப் போராயுதங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சோவியத்-அமெரிக்க உடன்படிக்கை (ஸால்ட்-2)யும் இதர பல சோவியத்-அமெரிக்க தஸ்தாவேஜுகளும் கைச்சாத்தாகின. ஸால்ட்-2 உடன்படிக்கை கைசாத்திடப்பட்டமையை இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் சுமுகமடைகின்ற, சர்வதேச நிலவரம் சீரடைகின்ற மார்க்கத்தில் ஒரு முன்னேற்றமான நிகழ்வு என சோவியத் யூனியன் நம்புகின்றது.

ஏகபோக அடக்குமுறைக்கு எதிராகவும் சுரண்டலமைப்புக்கு எதிராகவும் நடத்தப்படும் வர்க்கப் போராட்டங்களுக்கும் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் முகம் கொடுக்கும் சமூக பொருளாதாரப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணுவதற்கும் இணக்க அமைதிப் போக்கு மிகச் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கி வருவது மகாநாடு வகுத்தளித்த மார்க்கத்தின் காத்திரத்தன்மையை கடந்த ஒரு தஸாப்த காலம்ருஜூபித்துள்ளது. தமது சுயாதீனத்தை வென்றெடுத்தநாடுகள் முன்னே புதிய வளர்ச்சி வாய்ப்

புகள் விரிகின்றன, ஏகாதிபத்திய-எதிர்ப்பு நடவடிக்கைகள் தீவிரம் பெற்று வருகின்றன. கம்யூனிஸ்ட் கட்சிகளின் செல்வாக்கு அதிகரித்து வருவதும், போர்த்துக்கல், பெஸ்யின் ஆகியவற்றில் பாசிஸ ஆட்சிகள் தகர்ந்து சரிந்துள்ளமையும் எதியோப்பியா, மொஸாம்பிக், அங்கோலா, ஆப்கானிஸ்தான், ஈரான் ஆகியவற்றில் ஏகாதிபத்திய-எதிரப்பு வெகுஜனப் புரட்சிகள் வெற்றி பெற்றுள்ளமையும் இவற்றுக்குச் சான்று பகர்வனவாக உள்ளன. தெற்கு ஆபிரிக்காவில் நவகலோனியலிஸத்தின் இறுதி தூண்கள் மீதான தாக்குதல் தீவிரம் பெற்று வருகின்றது. லத்தீன் அமெரிக்காவில் தேசிய விமோசன இயக்கம் வீறும் வேகமும் பெற்று வருகின்றது. சுயாதீனத்துக்கும் விடுதலைக்குமான அரபு மக்களின் போராட்டம் உறுதிபெற்று வருகின்றது.

அதே வேளையில், சர்வதேச வாழ்வில் இணக்க அமைதி பிரதான போக்காக இருந்து வருகின்ற பொழுதிலும் அதுஇன்னும் உலக சமாதானத்தை உத்தரவாதப்படுத்துவதாயில்லை. புரட்சிகர, சமாதான சக்திகள் வெற்றிகள் பெற்று வருகின்ற தசையில், ஏகாதிபத்திய பிற்போக்கு சக்திகளும் தமது சதிகளை தீவிரப்படுத்தி வருகின்றன. ''சோவியத் அச்சுறுத்தல்'' என்ற தமதுபூச்சாண்டிப்புளுக்களை அவிழ்த்து விட்டு பூர்ஷுவா சித்தாந்திகளும் அரசியல் வாதிகளும் ஆயுதப் போட்டியை முடுக்கி விட தம்மாலாதனைத்தையுஞ்செய்து வருவதுடன், சோவியத் யூனியனுக்கும் இதர சோஷலிஸ நாடுகளுக்கும் எதிரான சித்தாந்த குழிபறிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்; ''மனித உரிமைகள்'' பற்றிய புரளிப் பிரசாரத்தை முகாந்திரமாகக் கொண்டு கம்யூனிஸ விரோத பிரசாரத்துக்குத் தூபம் போடுகின்றனர்.

இதனுல் தான் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் சோஷலிஸ நாடுகளின் மக்களுக்கும் சர்வதேச உழைக்கும் வர்க்க இயக்கத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும், தேசிய விமோசன இயக்கங்களுக்குமிடையிலான உறுதியான ஒருமைப்பாட்டினை மேம்படுத்துவதன் அவசியப்பாடு குறித்து மகாநாடு வகுத்தளித்த வழிமார்க்கம் இன்னும் அர்த்தமும் ஆழமும் கொண்டதாக உள்ளது. ஏகாதிபத்தியம் பின்பற்றும் குற்றவழிப்பட்ட கொள்கைகளை மேலும் பட்டவர்த்தனப்படுத்துமாறும் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புச் சூழ்ச்சிகளையிட்டு மக்கள் மிகுந்த விழிப்புடன் இருக்கவேண்டுமென்றும் மகாநாடு விடுத்த அறைகூவல் இன்று மேலும் உறுதியாக ஒலிக்கிறது.

## ஒருமைப்பாடே உறுதியான அத்திவாரம்

மார்க்ஸிஸ—லெனினியத்துக்கும், பாட்டாளிவர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளுக்கும் விசுவாசமாக இருப்பதிலேயே கம்யூனிஸ இயக்கத்தின் வலு தங்கியுள்ளது.

உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் விருத்தியைப் பொறுத்தளவில், இதன் பொருள் யாதெனில், சர்வதேச விமோசன இயக்கத்தின் பிரதான அரணாகவுள்ள உலக சோஷலிஸ அமைப்பினை மேலும் வலுப்படுத்துவதும், சர்வதேச கம்யூனிஸ இயக்கத்தின் ஐக்கியத்தை மேலும் சக்திப்படுத்துவதும் ஏகாதிபத்தியத்தின் நிலைகளைப் படிப் படியாக வென்றெடுப்பதுமேயாகும்.

1969ஆம் ஆண்டு மகாநாடு ஒரு மார்க்ஸிஸ—லெனினிஸக் கட்சியின் சுயாதீனத்துக்கும் அதனது சர்வதேசியக் கடமைக்குமிடையிலான இணைப்புறவு தொடர்பான பிரச்னையை விளக்கமாகவும் கோட்பாடுவழிப்பட்ட ரீதியிலும் தெளிவுபடுத்தியிருந்தது: ''ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சியும் அதனது இயக்கத்துக்கும், அதனது உழைக்கும் வர்க்கத்துக்கும், மக்களுக்கும் தானே சுய ஐவாப்தாரியாக இருக்கின்ற அதே வேளையில், சர்வதேச உழைக்கும் வர்க்கத்தைப் பொறுத்தும் அதற்கு ஒரு கடப்பாடும் பொறுப்பும் உண்டு. ஒவ்வொரு கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சியினதும் தேசிய, சர்வதேசிய கடப்பாடுகள் பிரிக்கப்படமுடியாதவை''2

மகத்தான பாட்டாளிவர்க்க மரபுகளை முன்னெடுத்துச் செல்லும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸ் (1976) இன்றைய நிலைமையில், உழைக்கும் வர்க்க புரட்சிகர தத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றான பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தின் விசேஷ முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. சோவியத் கம்யூனிஸ்டுகளின் காங்கிரஸானது சர்வதேசியம் குறித்த, மார்க்ஸிஸ—லெனினிய போதங்களை மேலும் செழுமைப் படுத்தும் புதிய ஆய்வுரைகளை முன்வைத்ததுடன், சர்வ தேசியக் கோட்பாட்டினை திரித்தும் புரட்டியும் வந்தோரின் திருகுதாளங்களையும் பட்டவர்த்தனப்படுத்தியது. பாட்டாளிவர்க்க சர்வதேசிய கோட்பாடுகளுக்கு விசுவாசமாக இருப்பதே அனைத்துப்புரட்சிகரச் சக்திகளுக்குமான முன்னணிப்படைப் பாத்திரத்தை வகிக்குமளவுக்கு கம்யூனிஸ இயக்கத்துக்கும் சோஷலிஸ சமாஜத்துக்கும் உயர் அந்தஸ்தினையும். செல்வாக்கினையும் உத்தரவாதப் படுத்தியுள்ளது.

புரட்சிகர சக்திகளுக்கிடையிலான உறுதியான ஒத்துழைப்புக்கும், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான ஐக்கியப் பாட்டினுக்கும் எல்லாப் பிரச்னைகளைப் பொறுத்தளவிலும் எந்திரரீதியில் ஒத்துப்போயே தீரவேண்டுமென்ற நியதி இல்லை. நவீன உலகின் சிக்கல்மிக்க நிலவரங்கள், வேறு

---

2 முன்னர் மேற்கோள் காட்டப்பட்ட அதே நூலிருந்து

பட்ட நாடுகளில் வேறுபட்ட நிலைமைகளின் கீழ் கம்யூனிஸ்டுகள இயங்கி வருகின்றமை முதலானவற்றால் சில சமயங்களில் குறிப்பிட்ட ஒரு பிரச்னை பற்றிய அணுகுமுறைகள், மதிப்பீடுகள், அபிப்பிராயங்கள் ஆகியவற்றில் வேறுபடுகின்ற, வித்தியாசப்படுகின்ற சூழலும் உருவாகுவதுண்டு. இந்த உண்மையை மனங்கொண்டு இத்தகைய பிரச்னைகளை நிஜமான தோழமையுணர்வுடனும், ஒவ்வொரு கட்சியினதும் சுயாதீனத்தைக் கௌரவிக்கும் சமத்துவக் கோட்பாடுகளுக்கு அமைய அலசி ஆராய்வதும் முழு இயக்கத்தினதும் ஐக்கியத்தை வலுப்படுத்த முடிந்த ஒவ்வொரு முயற்சியை மேற்கொள்ளுவதும் கம்யூனிஸ்டுகளின் கடமையாகும். சோ.க.கட்சியானது அதனது கம்யூனிஸ்ட் சகோதரர்களின் ஆக்கபூர்வமான முயற்சிகளில் அதிக கரிசனை காட்டுகின்றது. எந்த ஒரு தத்துவத்தின் அல்லது கோட்பாட்டின் பிசகினையோ அல்லது பிசகற்ற தன்மையினையோ நடைமுறை அனுபவம் என்ற அளவு கோலினுல்தான் அளக்க முடியும் என அது நம்புகின்றது. ஆனுல் நடைமுறை அனுபவம் "அதனது தீர்ப்பினை வழங்கி விடுவதற்கு" முன்னர், சர்ச்சைக்குரிய கோட்பாடுகளை பல்வேறு கட்சிகளினதும் அனுபவங்கள், அபிப்பிராயங்கள் முதலானவற்றைக் கருத்திற் கொண்டு தோழமையுணர்வுடன் விமர்சிப்பதும் விவாதிப்பதும் சாத்தியமானது ; அவசியமானதும் கூட.

கோட்பாடு தொடர்பான விஷயங்களில் ஊசலாட்டங்களுக்கோ மார்க்ஸிஸ—லெனினிய தத்துவத்துக்கு ஒவ்வாத கருத்துக்களுடன் இசைபடுவதற்கோ இடமளிக்காத மார்க்ஸிஷ—லெனினிய நிலைபாட்டின் அடிப்படையிலேயே இவ்வாருன வாதப்பிரதிவாதங்கள் நடைபெறவேண்டும். புரட்சிகர சித்தாந்தத்தின் தூய்மையைப் பேணுவதற்கும், அதனை ஆக்கபூர்வமாக வியாப்தி செய்வதற்குமான போராட்டமும் வலதுசாரி, "இடதுசாரி" சந்தர்ப்பவாதப் போக்குகளைக் களைந்தெறிவதும் உலக கம்யூனிஸ்டுகளின் முக்கியத்துவம் மிக்க பணியாகவும், புனித கடமையாகவும் தொடர்ந்தும் உள்ளன.

1969ம் ஆண்டு மகாநாட்டின் பின்னர் ஐம்பதுக்கும் அதிகமான சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் சர்வதேச மகாநாடுகள் நடைபெற்றுள்ளன. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி இதர சகோதரக் கட்சிகளுடனுன உறவுகளை விஸ்தரித்துக் கொண்டுள்ளது; அவற்றுடன் தூதுக்குழுக்களைப் பரிமாறிக் கொண்டுள்ளது; அரசியல், தத்துவார்த்தப் பிரச்னைகள் தொடர்பான கட்சிகளின் மகாநாடுகளுக்குப் பிரதிநிதிகளை அனுப்பியுள்ளது. இவற்றுள் 1978 ஸோச்சபியா (பல்கேரியா)வில் "சோஷலிஸ, கம்யூனிஸ நிர்மாணமும் உலக

வளர்ச்சிப் போக்கும்'' என்ற மகுடத்தின் கீழ் நடை பெற்ற விஞ்ஞான தத்துவார்த்த மகாநாடு முக்கியத் துவம் வாய்ந்தது. இதில் 73 கம்யூனிஸ்ட், தொழிலா ளர் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சோஷலிஸத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சாதனைகளை கம்யூனிஸ்டுகள் உயர்வாக மதிப்பீடு செய் ததை இம் மகாநாடு உணர்த்தியது. ''புதிய மோஸ் தர்'' சோஷலிஸத்தை உருவாக்குவது பற்றிய கோரிக் கைகளை முன்வைத்த சுய—பாணி கம்யூனிஸ்டுகளுக்கு மகாநாட்டில் கலந்து கொண்ட பல பிரதிநிதிகள் தகுந்த பதிலடி கொடுத்தனர்.

இன்று ஏறத்தாழ உலகின் ஒவ்வொரு மூலையிலும் கம்யூனிஸ்டுகள் தளராதும் தன்னலம் கருதாதும் இயங்கி வருகின்றனர். ஏறத்தாழ 700 லட்சம் கம்யூனிஸ்டுகளின் படையொன்று அதாவது கோடான கோடி தேச சக்தி களுக்கு தலைமை தாங்கி நிற்கின்றது. இது வர்க்கரீதி யான குறுகிய மனப்பான்மையும், பிரிவினை வாதமும் கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கு ஒவ்வாதவை என்பதையும், உலக புரட்சிகர விமோசன இயக்கத்துக்கு தலைமை தாங்கும் ஆற்றல் கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கே உண்டு என்பதையும் துலாம்பரப்படுத்துகின்றது.

★ ★

இன்றைய காலகட்டத்தின் மூன்று முக்கிய புரட்சி கர சக்திகளான உலக சோஷலிஸ அமைப்பு, சர்வ தேச உழைக்கும் வர்க்க இயக்கம், தேசிய விமோசன இயக்கம் ஆகியவற்றின் ஒருமைப்பட்ட ஐக்கியம் வளர்ந்து வலுப்பட்டு வருகின்ற ஒரு சூழலை கம்யூனிஸ்ட்,தொழி லாளர் கட்சிகளினது மகாநாட்டின் 10வது ஆண்டு நிறைவு கொண்டாடப்படுகின்றது. சர்வதேச ஒருமைப் பாடும், மக்களின் ஏகாதிபத்திய—எதிர்ப்பு போராட் டம் வலுத்து வருவதும் ஏகாதிபத்திய, பிற்போக்கு, யுத்தவெறிச் சக்திகள் மீது அவர்கள் ஈட்டப்போகும் இறுதி வெற்றிக்கான உத்தரவாதங்களாக உள்ளன.

பேராசிரியர் வலேரியா செலுன்ஸ்கயா

# லெனினது கூட்டுறவுத் திட்டமும் கட்சியும்

**லெனினால் வகுத்தளிக்கப்பட்ட கூட்டுறவுத்திட்ட கோட்பாடுகளும், கருத்துக்களுமே சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் விவசாயத்துறைக் கொள்கையில் அடியத்திவாரமாக உள்ளது.**

சோஷலிஸ சமுதாயத்தினை நிறுவுதல் அதனைக் கட்டி வளர்த்தல் ஆகியன தொடர்பான மார்க்ஸிய-லெனினிய போதனைகளின் ஒரு முக்கிய அம்சமாக இருப்பது லெனின் வகுத்தளித்த கூட்டுறவு மயத்திட்டமே இது உழைக்கும் மக்களின் அடிப்படை நலன்களுக்கு இயைந்ததாக உள்ளது. பொருளாதாரத்தினையும், வாழ்க்கை முறையினையும், நாட்டுப் புறத்தினையும் நகர்ப்புறத்தினையும் சார்ந்த சிறு—உற்பத்தியாளர்களின் பிரக்ஞையினையும் புரட்சிகரரீதியில் புனரமைப்பதில் லெனினது கூட்டுறவுமயக் கோட்பாடுகளும் காத்திரமான துணைக்கூறுகளாக மாறியுள்ளன.

## கூட்டுறவுவே அடியாதாரம்!

சிறு—விவசாய மூலஸ்தர்களை பாரிய அளவிலான விவசாய அபிவிருத்திக்கு வகை செய்யும் விவசாய கூட்டு நிறுவனங்களில் ஒன்று படுத்துவதனைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மிக முக்கிய இலக்குகளில் ஒன்றாக விஞ்ஞான சோஷலிஸத்தின் பிதாமகர்களான மார்க்ஸூம் ஏங்கல்ஸூம் கருதினர். தனித்தனி விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கும் முயற்சிகளுக்கும் நிலத்தின் தனியார் சொத்துடைமை முறையினை இஷ்டபூர்வமாக அடிப்படையில் கூட்டுடைமை முறையாக மாற்றியமைப்பதற்கும் அரசு கடமைப்பட்டுள்ளது என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

விவசாயத்துறையிலான கூட்டுறவினை சோஷலிஸப் பொருளாதாரத்துக்கு மாறிச் செல்லும் ஒரு இடைக்கால கட்ட நிகழ்வாக மார்க்ஸும் ஏங்கல்ஸும் கருதினர். இத்தகைய ஒரு மாற்றம்பொருளாதாரத்தின் கூட்டுறவுக்துறைகளை நெறிப்படுத்தும் ஆற்றலைத் தன்னகத்தே கொண்ட சோஷலிஸ அரசே உத்தரவாதப்படுத்துகின்றது.

சோவியத் யூனியனின் அனுபவம் தொடர்பாக லெனின் கூறுகையில் மார்க்ஸிய வழிப்பட்ட விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை லெனின் மேலும் தெளிவுபடுத்தினார். குறிப்பாக தனித்தனி விவசாயிகளை சோஷலிஸ விவசாயத்துறை மார்க்கத்துக்கு இட்டுக் செல்லுவது பரந்த-அளவிலான சோஷலிஸ விவசாய உற்பத்தி முறையினை ஏற்படுத்துவது ஆகியது தொடர்பான முக்கிய போக்குகள், கட்டங்கள், வடிவங்கள், கோட்பாடுகள் ஆகியவற்றினை அவர் விஸ்தாரமாக விளக்கினார் சோஷலிஸ நிர்மாணத்தில் கூட்டுறவு ஸ்தாபனங்களைப் பயன்படுத்துகின்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நவ அனுபவத்தை தத்துவார்த்த ரீதியில் பொதுப்பட விளக்கிய அவர், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்கு மாறிச் செல்லும் காலகட்டத்தில் நிகழக்கூடிய சமூக, பொருளாதார பரிணமங்களின் போக்குகளை அலசி ஆராய்ந்தார். அரசுக்குச் சொந்தமான, அதாவது' முழு நாட்டுக்கு உடமையான சொத்துக்களுடன் கூட்டுறவு வழிப்பட்ட வடிவிலான சோஷலிஸச் சொத்துடமை முறையும் இருப்பது சாத்தியம் என்ற புதிய விஞ்ஞான பூர்வமான முடிவு ஒன்றினையும் அவர் வகுத்தளித்தார்.

உற்பத்தி சாதனங்கள் (நிலம் தொழிற்சாலைகள், சுரங்கங்கள் ரயில்வேக்கள் முதலானவை) சமூகச் சொத்துடமையாகும் பட்சத்திலும் முதலாளித்துவத்தினை பாட்டாளிவர்க்கம் வெற்றி காணும் பட்சத்திலும் ஒரு நாகரீகமயமான கூட்டுறவாளர்களின் அமைப்பே, நடைமுறையில் சோஷலிஸ அமைப்பாக இருக்க முடியும் என்றும் லெனின் வலியுறுத்தினார். விவசாயத்துறையின் உற்பத்தி சாதனங்களை சமூகமயப்படுத்துவது, பற்றிய கூட்டுப் பண்ணைகளை அமைப்பதுமே சோஷலிஸத்தினை எய்துவதற்கான முக்கிய மார்க்கம் என அவர் நம்பினார். விவசாயிகள் குளாம்களை உற்பத்திக் கூட்டுறவு அமைப்புகளாக மாற்றியமைக்கும் பணியில் தொழிற்துறைமயம், மின்மயம் ஆகியவற்றின் அடிப்படையில் விவசாயத்துறையினை புனரமைக்கும் ஆற்றல் பெற்ற சோஷலிஸத் தொழிற்துறை தலைமைப்பாத்திரம் வகிக்க வேண்டும் என்றும் அவர் நம்பினார். தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்குமிடையிலான நேச இணைப்பின் வலிமை பொருளாதாரத்தின் ''உயர் பீடங்களை'' கட்டுப்படுத்தும் தொழிலாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரம் கட்சியின் உறுதியான தலைமை

ஆகியனவே இப் போராட்டத்தில் சோஷலிஸ அம்சத்தின் வெற்றியை உத்தரவாதப்படுத்த முடியும்.

விவசாயிகளின் கூட்டுறவு இயக்கத்தினை அரசு நெறிப் படுத்தும் முக்கிய கோட்பாடுகளை லெனின் தமது கூட் டுறவுத் திட்டத்தில் வகுத்தளித்திருந்தார். நாட்டுப்புறத் தில் புதிய சமூக அமைப்பினை நிறுவி வளர்த்து வலுப்படுத்து வதில் பொருளாயத, தொழில்நுட்ப, ஸ்தாபன, அரசியல் உதவிகளை வழங்குவன; இஸ்டபூர்வமான அடிப்படையில் அங்கத்தவர்களைத் திரட்டுவது ஆகியன இக்கோட்பாடுகளில் அடங்கியிருந்தன.

லெனினது கூட்டுறவுமயத்திட்டத்திலடங்கிருந்த கருத்துக்களை சோஷலிஸ கூட்டுறவியக்கம் நடைமுறையில் ருஜூபடுத்தவிருப்பதுடன், இக்கருத்துக்களை திரிக்க முயன்ற திரிபுவாதிகளுக்கு எதிராக கட்சி நடாத்திய போராட்ட அனுபவத்தினுல் மேலும் வளப்படுத்தப்பட்டுமுள்ளன.

1920க்களில் கட்சி இயற்றிய தீர்மானங்களில் கூட் டுறவு அமைப்புக்கான அரசாங்க ஆதரவினையும், கூட் டுறவு வாயிலாக நகரப்புறத்துக்கும் நாட்டுப் புறத்துக்கு மிடையிலான பொருளாதார மற்றும் தொடர்புகள் உறுதிப் படுத்தப் படுவதனையும் வலியுறுத்தின. சோவியத் கூட்டுற வுமயத்தின் சோஷலிஸத் திசையமைவினை 13வது கட்சி மகாநாட்டு (1924, ஜனவரி) தீர்மானங்களும் வலியுறுத்தி யதுடன் இதனை ஒரு வர்த்தக வழிப்பட்ட ராஜ்ய-முதலா ளித்து அமைப்பு முறை என்று வர்ணிக்கத்தலைப்பட்ட ரொட்ஸ்கிவாதிகளையும்1 வன்மையாகக்கண்டித்தன, 13வது கட்சி மகாநாடு (1924, மார்ச்) விவசாயிகளைக் கூட்டுறவு விவசாய அமைப்பு வாயிலாகவே சோஷலிஸத்துக்கு இட் டுச் செல்ல முடியும் என்று வலியுறுத்திய கூட்டுறவுமயத் திட்டம் பற்றிய லெனினது ஆய்வுரையை முக்கிய தாக்கீ தாக நிறைவேற்றியது.

---

1. ரொட்ஸ்கிவாதிகள் எனப்படுபவர்கள் மார்க்ஸிஸ— லெனினியத்துக்கும் சர்வதேச கம்யூனிஸ்ட், தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கும் விரோதமான எதிர்ப்புரட்சிக் கோஷங்களை முன்வைத்தவர்கள். ரொட்ஸ்கிவாதம் இந் நூற்ருண்டின் ஆரம்பத்தில் ருஷ்யாவில் உதயமாகியது. புரட்சியில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமைப்பாத்திரத் தினையும் பட்டாளிகளுக்கும் விவசாயிகளுக்குமிடையிலான வர்க்க வழிப்பட்ட இணைப்பு பற்றிய மார்க்ஸிஸ-லெனினிய கோட்பாட்டினையும் நிராகரித்தவர்கள்

## உக்கிரமான சித்தாந்தப் போராட்டம்

கூட்டுறவுமயமும் சோவியத் அரசின் கீழ் அதனது வர்க்க வழிப்பட்ட குணும்சமும் மிகவும் சூடான வாதப் பிரதிவாதங்களுக்கான விஷயங்களாக இருந்தன. தனியொரு நாட்டில் சோஷலிஸத்தினை நிர்மாணிக்கும் சாத்தியப்பாடு பற்றி 1920க்களில் நடைபெற்ற முக்கிய சித்தாந்த, அரசியல் சர்ச்சையுடன் சம்பந்தப்படுத்தியே மேற்படி வரதப் பிரதிவாதங்களும் நடைபெற்றன.

## 'கூட்டுறவு மயம் பற்றி'

என்ற கட்டுரையில் லெனின் தனது நிலைபாட்டினைத் தெளிவு படுத்தியிருந்தார். பாட்டாளிவர்க்க சர்வாதிகாரமொன்றின் கீழ் ''நிரந்தர சோஷலிஸ வடிவங்களுக்கு'' இயைய கூட்டுறவு ஸ்தாபனங்கள் சோஷலிஸ மார்க்கங்களில் விவசாயிகள் முன்னேறும் சாத்தியப்பாட்டினை உத்தரவாதாப்படுத்தும் பல்வேறுபட்ட சோஷலிஸ தொழில்லகங்களாக அமைய முடியும் என அவர் கூறினுர்.

இதற்கு எதிராகக் குரலெழுப்பியவர்கள், குறிப்பாக ரொட்ஸ்கிவாதிகள் இந்த சாத்தியப்பாடுகள் குறித்து அவநம்பிக்கை தெரிவித்தனர். தமது விவாதங்களின் போது விவசாயிகளின் கூட்டுறவினை 'குலாக்' நிலக்கிழார்களின் என்று முத்திரை குத்தியதுடன் விவசாயிகளின் கூட்டுறவினைக் கலைக்கும் வகையிலான கருத்துக்களை முன்வைத்தனர். தனியொரு நாட்டில்சோஷலிஸத்தை நிர்மாணிப்பது பற்றிய முக்கிய சர்ச்சையில் தானடைந்த தோல்வியினை மூடிமறைக்கின்ற ஒரு திரையாகவே ரொட்ஸ்கி இவ்வாருன ஒரு நிலைபாட்டினை எடுத்துக் கொண்டார் நாட்டுப் புறத்திலுள்ள உற்பத்தி சக்திகளை முதலாளித்துவ மார்க்கங்களில் விருத்தி செய்ய முடியும் என ரொட்ஸ்கி வாதித்தார் இந்த ரொட்கிவாத நிலைபாட்டினை கட்சி வன்மையாகக் கண்டித்தது.

ரொட்ஸ்கி வாதத்தினைப் பட்டவர்த்தனப்படுத்திய அதே வேளையில், கட்சியானது லெனினது கூட்டுறவுமயத் திட்டத்தின் அர்த்தத்தினைத் திரித்துக் காட்ட முயன்ற வலதுசாரி பிளவுவாதிகளுக்கு எதிராகவும் விட்டுக் கொடுக்காத போராட்டத்தினை நடாத்தியது,

14வது கட்சி மகாநாட்டுத் (1925) தீர்மானங்கள் விவசாயிகள் சம்பந்தப்பட்ட பிரச்னையில், வலதுசாரிச் சந்தர்ப்பவாத அச்சுறுத்தல் பற்றியும் கவனத்தை ஈர்த்தன. தனியார் மூலதனத்தின் மீதான சோஷலிஸ பொருளாதார வடிவங்களின் வெற்றியினை ஒவ்வொரு வழியி

லும் உத்தரவாதப்படுத்துவதற்கான பணியினை மகாநாடு முன்வைத்தது. நாட்டுப்புறத்தில் சோஷலிஸத்தின் 'சுயேச்சையான' வளர்ச்சி பற்றிய வலதுசாரி உபாயமார்க்கத்தை அது நிராகரித்தது. விவசாயத்துறையில் கூட்டுறவுமயத்தின் வேறுபட்ட வடிவங்களின் வளர்ச்சிக்கு அதனது முழு ஆதரவினையும் தெரிவித்தது.

## கூட்டுறவுமயத்தினை நோக்கி

கூட்டுறவுமயக் கொள்கையினை வகுத்தளித்த 15வது கட்சி காங்கிரஸின் (1927) பணிகள் லெனினது கூட்டுறவுமயத் திட்டத்துக்கான காத்திரமான பங்களிப்பாக அமைந்தது. விவசாய உற்பத்தியினை சோஷலிஸ மயப்படுத்துவது ஒத்துழைப்பு, ஒருமைப்பாடு ஆகியன லெனினது கூட்டுறவுமயத் திட்டத்தின் பெறுபேறே என காங்கிரஸ் தெளிவாகவும், விளக்கமாகவும் வலியுறுத்தியது.

கூட்டுறவுமயக் கொள்கையினை மேலும் வளப்படுத்தி வகுத்தளித்த 15வது காங்கிரஸ் நாட்டினை மின்மயப்படுத்தும் திட்டத்தினை லெனினது கூட்டுறவுமயத் திட்டத்திலிருந்து வேறுபடுத்தவும் லெனினது சோஷலிஸ நிர்மாணத் திட்டங்களின் பல்வேறு அம்சங்களைப் பங்கு போட்டுக் கொள்ளுவதற்கும் முயன்றவர்களையும் வன்மையாகக் கண்டித்தது.

1929 கோடை பருவத்தில் கூட்டுப்பண்ணைகள்பால் விவசாயிகள் கொண்டிருந்த மனோநிலையில் ஏற்பட்ட புரட்சிகர மாற்றத்துடன் கூட்டுப்பண்ணைகளை பரவலாக அமைப்பதற்கான பேரியக்கம் ஆரம்பித்தது.

1929 நவம்பரில் நடைபெற்ற கட்சி மத்திய கமிட்டியின் பிளீனம் கூட்டம் இந்த மாற்றத்தினை மதிப்பீடு செய்ததுடன் கூட்டுப்பண்ணை இயக்கத்தினை நெறிப்படுத்தும் வழிமுறைகளையும் வகுத்தளித்து.

★ ★ ★

சோவியத் யூனியனில் கூட்டுப்பண்ணை அமைப்புமுறை வெற்றி பெற்றமை லெனினது கூட்டுறவுமயத் திட்டத்தின் காத்திரத்தன்மையை ருஜுப்படுத்தியுள்ளது. சமூக உறவுகளின் ஒரு புதிய அமைப்பும் ஒரு புதியரக விவசாயத் தொழிற்துறையும் நாட்டுப்புறத்தில் ஆழமாக வேரோடிவிட்டன; விவசாயிகளின் சமூக இயல்பும் அடிப்படை மாற்றங்களுக்குட்பட்டுள்ளது. சோவியத் அனுபவம் சர்வதேச அங்கீகாரத்தையும் சோஷலிஸ வென்றெடுத்துள்ளது. இது நிர்மாணதத்துவத்தினதும் நடைமுறைக்குமான ஒரு முக்கிய பங்களிப்புமாகும்.

ஏ. கர்பென்கோ, எல். பெகார்ஸ்கி

# சோஷலிஸ திட்டமிடலின் சர்வதேச பண்புக்கூறு

"'சோஷலிஸத் திட்டமிடல்' தொடரில் கடைசியான கட்டுரை ஏ. கர்பென்கோ, எல். பெகார்ஸ்கி ஆகியோர் எழுதி நொவஸ்தி செய்தித்துறையால் 1978ல் வெளியிடப்பட்ட "சோவியத் பொருளாதாரம்: திட்டமிடலின் இயங்குநுட்பம்" என்ற நூலை அடிப்படையாகக் கொண்டதாகும்.

உலக சோஷலிஸ அமைப்பு உருவானதோடு சோஷலிஸத் திட்டமிடலானது சர்வதேசப் பண்பைப் பெறுகிறது. திட்டங்களைத் தீட்டுவது, நடைமுறைப்படுத்துவதிலான மாற்றப்போக்கில் ப.பொ.உ.க. நாடுகளின் அரசாங்கத் திட்டங்களின் ஒத்திசைவு (அல்லது கிரமமாக இணைத்தலே) என்பதே முக்கியமான கோட்பாடாகும்.

## பொருளாதார அடிப்படை

சோஷலிஸ நாடுகளின் தம்முள் ஒத்த பொருளாதார அடிப்படைகள்—உற்பத்திச் சாதனங்களின் மக்களுடைமை (தொழிற்சாலைகள், நிலம் என்பன) என்பவற்றைத் தொடர்ந்தே பொருளாதாரத் திட்டங்களை ஒத்திசையச் செய்தலின் (அல்லது கிரமமாக இணைத்தலின்) தேவையும், சாத்தியப்பாடும் ஏற்படுகின்றன. உற்பத்திச் சாதனங்களின் தனியார் உடைமையை ஒழிப்பதும் அவற்றின் பொதுவுடைமையும் தேசிய, சர்வதேச நலன்களை இணக்கமாக இணைப்பதற்கான நல்ல எதிர்காலத்தைத் தோற்றுவித்ததோடு சமத்துவம், இறைமையை மதித்தல், நட்புறவு, பரஸ்பர ஒத்துழைப்பு, பரஸ்பர நன்மை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதுரக சர்வதேச உழைப்புப் பிரிவினை ஏற்படவும் காரணமாயிற்று.

ஒத்திசைவான திட்டங்களுக்கேற்ப உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை உலக சோஷலிஸ சந்தைக்கு ப.பொ.உ.க. நாடுகள் வழங்குவது என்பதே சோஷ

லிஸ உழைப்புப் பிரிவினை என்பதன் அர்த்தமாகும். விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு தொழிற்துறை அடிப்படையில் சோஷலிஸ சமாஜநாடுகள் தமது பொருளாதாரங்களை அபிவிருத்தி செய்கின்றன.

ஜனநாயக மத்தியத்துவ கோட்பாடுகளை ஆக்கபூர்வமாகப் பிரயோகித்தே இச் சமாஜத்தின் திட்டங்கள் ஒத்திசைவாக்கப்பட்டுள்ளன. ப.பொ.உ.க, பொருளாதார ஒத்துழைப்பிற்கான சர்வதேச வங்கி (ஐபீஈசி), சர்வதேச முதலீட்டு வங்கி (ஐஐபீ) போன்ற கூட்டு பொருளாதார ஸ்தாபனங்களின் உருவாக்கத்தோடு இது சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுகிறது. ஒன்றுபட்டு திட்டமிடல், கூட்டு முடிவுகள் என்பவற்றினடிப்படையிலான ஒத்திசைவான நடவடிக்கையிலேயே ப.பொ.உ.க.வின் பணிகளிலான மத்தியத்துவப் படுத்தலின் அடிப்படை அம்சங்களிருக்கின்றன.

## தாக்கமிக்க விளைவுகள்

இந்த நீண்டகாலத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதானது, திட்டமிட்ட அபிவிருத்தியின் ஒத்திசைவை மேலும் காத்திரமாக்குவதை இது சாத்தியப்படுத்தியுள்ளது; தேசிய பொருளாதாரங்களை மேலும் பூரணமாய் நிறைவேற்றவும் இது ஒன்றிற்கொன்று உதவியாயுள்ளது.

சீராக விரிவாகிவரும் தமது பரஸ்பர வர்த்தகத்தில் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சித் திட்டங்களின் ஒத்திசைவு என்பன பயன்மிகு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. ப. பொ. உ. க. ஏற்பட்ட 30 ஆண்டுகளில் இது மும்மடங்கிற்குமதிகமாகியுள்ளது. ப. பொ. உ. க. அங்கத்துவ நாடுகளின் பொருளாதார வளர்ச்சியையும் இது அதிகரித்துள்ளது. குறிப்பிட்டுக் கூறுவதானால் 1978ல் அவற்றின் தேசியவருமானம்1 1948 ஐவிட பத்துமடங்கதிகமாகும். உலக மக்கள் தொகையில் 10 சதவீதத்தையும், பிரதேசத்தில் 18,7 சதவீதத்தையும் கொண்ட ப. பொ. உ. க. நாடுகள் உலக மொத்த உற்பத்தியில் மூன்றிலொரு பங்கைத் தயாரிக்கின்றன. இந்நாடு மக்களின் நலன்கள் தினந்தோறும் சீர்பெற்றுவருகின்றன. சோஷலிஸ சமாஜத்தில் முழுமையான வேலை வழங்கப்பட்டுள்ளது. மக்களின் உண்மை வருமானம் திடமாக அதிகரித்துவருகிறது. 1956

1. ஒரு நாட்டில், ஒரு ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட பொருட் பெறுமதியின் அடக்க விலையிலிருந்து அதே காலத்தில் நுகர்ச்சிப் பெறுமதியைக் குறைத்த தொகை.

முதல் 1977 வரை ஆறு கோடி 30 லட்சத்திற்குமதிகமான குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

## ப. பொ. உ. க. வும் உலகப் பொருளாதாரமும்

ப. பொ. உ. க. திட்டத்தினடிப்படையிலேயே விசாலமான சர்வதேச ஒத்துழைப்பைப் பேணுகிறது. இது புதிதாய் விடுதலையடைந்த நாடுகளுக்கு பொருளாதார, அரசியல் சுதந்திரத்தை எய்த உதவுகிறது. வளர்முக நாடுகளுடனான ப. பொ. உ. க. வின் வர்த்தகம் 1950 முதல் 1977 வரை 40 மடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளது.

வளர்முக நாடுகளுடனான ஒத்துழைப்புகளை சோவியத் யூனியனும் விஸ்தரித்துவருகிறது. 1955ல் இரு நாடுகளுடனேயே பொருளாதார, தொழில்நுட்ப உதவி ஒப்பந்தங்கள் கைச் சாத்திடப்பட்டன. ஆனால் 1978ல் இவ்வித ஒப்பந்தங்கள் 64 நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ப. பொ. உ. க. வளர்முக நாடுகளுடனான பிணைப்புகளோடு சர்வதேச தொடர்புகளை விரிவாக்கிவருகிறது. ப. பொ. உ. க. வுக்கு ள்ளேயே ஒரு புதிய ரக பொருளாதார உறவுகளை மேற்கொள்வதானது விஸ்தாரமான, சர்வதேச முக்கியத்துவத்தைப் பெற்றுவருகிறது. இது, ப. பொ. உ. க. மற்றும் வளர்முக நாடுகளுக்கிடையில் பரந்த உறவுகளை ஏற்படுத்துவதற்கு சிறந்த அடித்தளமாயுள்ளது. இவ் உறவுகள் இரு தரப்பிற்குமே பெரும் நன்மை மிக்கதாகும்.

கொன்ஸ்தான்தின் செர்னென்கோ
அரசியல் குழு உறுப்பினர்
சோ. க. க. மத்தியக் கமிட்டியின் செயலாளர்

# ஜனநாயக மத்தியத்துவம் கட்சியின் ஸ்தாபனக் கோட்பாடு

கொன்ஸ்தான்தின் செர்னென்கோ எழுதிய ''சோவியத் யூனியனில் கம்யூனிஸ்டுகளாக இருப்பதன் அர்த்தம் என்ன?'' (ஏபிஎன் பிரசுரம் 1978) என்ற நூலிலிருந்து.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு விதி வருமாறு கூறுகிறது: (அ) அடிமட்டத்திலிருந்து மேல்மட்டம் வரை பிரதான குழுக்கள் அனைத்திற்குமான தேர்தல்; (ஆ) கட்சிக் குழுக்கள் தமது கட்சி ஸ்தாபனங்களுக்கும் உயர் குழுக்களுக்கும் அளிக்கும் ஒழுங்கான அறிக்கைகள் (இ) கண்டிப்பான கட்சி ஒழுங்கும் பெரும்பான்மைக்குச் சிறுபான்மையின் பணிவும் (ஈ) உயர்குழுக்களது தீர்மானங்களுக்கு கீழ்மட்டக் குழுக்கள் பணிந்து நடத்தல் ஆகிய ஜனநாயக மத்தியத்துவம் தான் கட்சியின் ஸ்தான கட்டமைப்பை வழிநடாத்தும் கோட்பாடுகள்.

## தர்க்கவியல் ஐக்கியம்

ஜனநாயக மத்தியத்துவம் இரண்டு அம்சங்களைக் கொண்டுள்ளது; ஒன்று மத்தியத்துவம், அடுத்தது ஜனநாயகம்; இரண்டும் ஒன்றுடனொன்று இணைந்துள்ளன.

மத்தியத்துவம் இல்லையேல் ஜனநாயகமானது கட்சியை உள் ஐக்கியமும், பூரணத்துவமும் ஸ்தாபன அமைப்பும் இல்லாத ஒரு சங்கமாக மாற்றிவிடும். இத்தகைய சங்

கம், சுரண்டலாளருக்கு எதிரான போராட்டத்தில், சோஷலிஸத்தை நிர்மாணிப்பதில், சிக்கலான பணிகளைக் கையாளுவதில் உழைக்கும் மக்களை வழிநடாத்திச் செல்லும் ஆற்றலற்றதாகவே இருக்கும்.

மறுபுறத்தில், மத்தியத்துவக் கோட்பாட்டினை மட்டும் அடித்தளமாகக் கொண்டிருக்கும் ஒரு கட்சியானது வெகுஜனங்களது நலன்களுடன் சம்பந்தப்படாத ஒரு அதிகார வர்க்கத்தையும் செக்டேரியன் அமைப்புக்களையும் உருவாக்கும் நிலையினை அடைந்துவிடும். இந்நிலைமைகளில் கட்சி உறுப்பினர்கள் யோசனையற்ற செயலர்களாக, ராஜ்ய விவகாரங்களில் தீவிரமாகச் செல்வாக்குச் செலுத்தக்கூடிய வாய்ப்புக்களை இழந்தவர்களாக ஆகிவிடுவர். அவர்கள் இந்த விவகாரங்களுக்கான பொறுப்பிலிருந்தும் விலகிவிடுகிறார்கள்; கம்யூனிஸ்டுகளாகவும் இருக்கமுடியாது.

இன்னொருவார்த்தையில் சொல்வதானால் ஒழுங்குமுறையும் மத்தியத்துவதும் அற்ற ஒரு குழப்பமான நிலை மார்க்ஸிய—லெனினியக் கட்சியைப் பங்கப்படுத்துகிறது.

''கட்சியில் நாம் எப்போதும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கிறோம். ஆனால் கட்சியின் மத்தியத்துவத்துக் கெதிராக ஒருபோதும் நாம் பேசியதில்லை. ஜனநாயக மத்தியத்துவத்துக்காக நாம் எப்போதும் முன்நிற்கிறோம்.''[1] என்று லெனின் கூறினார்.

கட்சியானது ஒரு பொதுஜன, இஷ்டபூர்வமான, ஜனநாயக ஸ்தாபனமாகும். சகல விவகாரங்களையும், தமது தலையாய குழுக்களை உருவாக்குவதுடன் சம்பந்தப்பட்டவை உள்ளிட்ட சகல விவகாரங்களையும் கட்சி உறுப்பினர்கள் கூட்டாக விவாதித்து முடிவுசெய்கிறார்கள். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸின் (1976) தயாரிப்புக்களின் போது, 94 சதவீத கம்யூனிஸ்டுகள் பங்கெடுத்துக்கொண்டார்கள்.

ஜனநாயக மத்தியத்துவமானது, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு முழுவதிலும் அதன் வழிகாட்டும் கோட்பாடாக இருந்து வருகிறது. ரஷ்யாவில் மன்னராட்சியும் பொலிஸ் தர்பாரும் இருந்தபொழுது, தலைமறைவு நடவடிக்கை நிலைகளில் கட்சியினால் அதன் உள்வாழ்க்கையில் ஜனநாயகக் கோட்பாடுகளை பூரணமையாகக் கடைப்பிடிக்க முடியவில்லை. கட்சியின் ஸ்தாபன அமைப்புப் பணியும் மத்தியத்துவத்தையே பிரதான அடித்

1. வி. ஐ. லெனின், திரட்டு நூல்கள், தொ. 21. பக். 424.

தளமாகக் கொண்டிருந்தது. இது சகல புரட்சிகர மார்க்ஸிஸ்டுகளின் ஒன்றிணைவை ஓர் ஒற்றை ஸ்தாபன அமைப்பாக உத்தரவாதப்படுத்தியது; சந்தர்ப்பவாதக் குழுக்களின் சீர்குலைவு முயற்சிகளைத் தாண்டிவரச் செய்தது.

1917 ல் மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி முடிவடைந்த பின்னர், கட்சி ஆட்சிக்கு வந்ததும் புரட்சியின் ஆதாயங்களைப் பாதுகாப்பதற்காக ஜனநாயகத்தைத் தற்காலிகமாகச் கட்டுப்படுத்தி மத்தியத்துவத்தை வலியுறுத்த வேண்டியிருந்தது. உள்நாட்டு யுத்தம், அந்நிய ராணுவத் தலையீடு (1918-1927) ஆகியன நடைபெற்ற போதும் நிலைமை இதுவே.

உள்நாட்டு யுத்தம் முடிவுற்ற பின்னர் நாட்டின் சமாதான நிர்மாணம் ஆரம்பமானபோது, கம்யூனிஸ்ட் கட்சியானது உட்கட்சி ஜனநாயகத்தை உறுதியுடன் மேம்படுத்தியது. இது கம்யூனிஸ்டுகளது அரசியல் நடவடிக்கைகளை உயிரோட்டமுடன் உற்சாகப்படுத்தியது. நாட்டின் அரசியல் வாழ்வில் மாபெரும் பாத்திரத்தை கட்சி இன்று வகிக்கிறது.

1941-1945 இன் மாபெரும் தேசபக்த யுத்தத்தின் போது வரலாற்றின் சோதனையில் கட்சிதிறமையுடன் நின்றுபிடித்தது. அது சோஷலிஸத் தாயகத்தைப் பாதுகாக்கும் தனது தேசபக்தக் கடமையைப் பூரணப்படுத்துவதில் தனது உயர் நடவடிக்கையை ஸ்தாபன அமைப்பை, பல் திறப்பட்ட தன்மையை வெளிப்படுத்தியது.

இந்நாட்களில் கம்யூனிஸ்ட்கட்சி தனது உட்கட்சி ஜனநாயகத்தை இடையறாது வளர்த்தும் அபிவிருத்தி செய்தும் வருகிறது. கம்யூனிஸ்டுகளது நடவடிக்கையை உயர்த்துகின்ற அதேவேளையில் மத்தியத்துவத்தையும் கட்சியின் ஒழுங்கு முறையையும் வலுப்படுத்துகிறது. எனவே ஜனநாயக மத்தியத்துவமானது புரட்சி வீரர்களது பல தலைமுறையினரின் கூட்டு அனுபவமாகவும் கூட்டு காரணமாகவும் விளங்குகிறது.

## அடிப்படை ஆணைகள்

ஜனநாயக மத்தியத்துவத்தை நடைமுறைப்படுத்தும் போது பல கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டியது அவசியம். கட்சிக் குழுக்களுக்கான தேர்தல் முறை, கூட்டுத்தலைமைத்துவம், விவாதத்துக்கும் விமரிசனத்துக்குமான சுதந்திரம், கட்சி ஒழுங்குமுறை, பெரும்பான்மையினரின் தீர்மானங்களுக்கு சிறுபான்மையினர் கீழ்ப்படிதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

கட்சிக் குழுக்களுக்கும் தலைவர்களுக்குமான தேர்தல் முறையானது, இந்த ஸ்தாபனத்தின் விவகாரங்களை நிர்வகிப்பதில் நம்பிக்கையானவர் யார் என்பதையும் எனவே தமது தலைவர்களின் பணிகளைக் கட்டுப்படுத்தும் மெய்யான வாய்ப்புக்களை இவர்கள் கொண்டுள்ளார்கள் என்பதையும் சுட்டிக் காட்டுகிறது. கட்சி வாழ்வின் ஒரு விதியான தேர்தல் முறை. கட்சியின் ஜனநாயக இயல்புக்கு மிகப் பிரதானமான, அடிப்படை அம்சமாகும்.

கட்சிக் குழுக்களுக்கு வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கவும், தீர்மானிக்கவும், விமர்சிக்கவும் அல்லது வேட்பாளருக்கெதிரான ஆட்சேபணை எழுப்பவும் ஒவ்வொரு கட்சி உறுப்பினருக்கும் வரையறையற்ற உரிமையுண்டு.

கட்சியின் சகல குழுக்களுக்குமான, கடைநிலைக் குழு தொடக்கம் சோ. க. க. வின் மத்தியக் கமிட்டி வரைக்குமான தேர்தலில் இரகசிய வாக்களிப்பு முறை ஒரு கட்டாய விதியாக அமைந்துள்ளது.

கூட்டத்திலோ அல்லது மகாநாட்டிலோ (காங்கிரஸ்) சமுகமளித்துள்ள கட்சி உறுப்பினர்களில் 50 சதவீதமான வாக்குகளை ஒரு வேட்பாளர் பெற்றிருந்தால் அவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஒரு வேட்பாளர் பற்றித் தமது கருத்தை வெளியிடவும் அவருக்கு ஆதரவாக அல்லது எதிராக வாக்களிக்கவும் கம்யூனிஸ்டுகளுக்குச் சுதந்தரமுண்டு.

கூட்டங்கள், மகாநாடுகள், காங்கிரஸ்கள், ஆகியவற்றில் கம்யூனிஸ்டுகளுக்குக் கட்சிக்குழுக்கள் வெளியிடும் ஒழுங்கான அறிக்கைகள் பிரதான குழுக்களைத் தேர்ந்தெடுக்கும் கோட்பாட்டுடன் மிகநெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணைக்குக் கட்சியின் சகல படிநிலைகளிலுமுள்ளவர்கள் கட்சிக்குழுத் தலைவரிலிருந்து சோ. க. க. மத்தியக் கமிட்டி வரை சகலரும் கட்டுப்பட்டவர்கள். இது தமது தலைவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தவும், அவர்களது பணிகள், ஒரு கூட்டத்தில், ஒரு மகாநாட்டில் அல்லது ஒரு காங்கிரஸில் கூட்டாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கமைய உள்ளனவா என்பதை அறிவதற்கும் கட்சி உறுப்பினர்கள் கையிலுள்ள ஒரு செயல்தன்மைமிக்க கருவியாகும்.

கட்சியின் மத்திய கமிட்டியானது, தனது முழுநிறைவான கூட்டத்தின் பணிகளையும் அதன் தீர்மானங்கள் பலவற்றையும் கம்யூனிஸ்டுகளுக்கும் அனைத்து மக்களுக்கும் விளப்பமாக அறிவிக்கிறது. கட்சி ஸ்தாபனங்களுக்கான தேர்தல்கள், அறிக்கைகள் போன்றவை பத்திரிகை, வானொலி, டெலிவிஷன் மூலமாக அனைவருக்கும் தெரியப்படுத்தப்படுகின்றன.

கட்சியின் வாழ்வையும் பணியையும் நிர்வகிக்கும் தலையாய கோட்பாடுகளினால் கூட்டுத் தலைமைத்துவம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதன் மூலம் சோ. க. க. வின் ஜனநாயக இயல்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பலரது அறிவையும் அனுபவங்களையும் ஒன்று திரட்டுவதன் மூலம் உறுதியான தீர்மானங்களை உருவாக்கவும் நிறைவேற்றவும், ஒரு தலைப்பட்சமான அணுகுமுறையையும், திட்டமிடப்படாத தீர்மானங்களையும் தவறுகளையும் தவிர்க்கவும் கம்யூனிஸ்டுகளது நடவடிக்கைகளை மேம்படுத்தவும் சாத்தியமாகிறது.

கட்சியின் உயர் குழுக்களான சோ. க. க. மத்திய கமிட்டி, அதன் அரசியல் குழு, செயலவை ஆகியன தமது பணிகளில் கூட்டுத் தலைமைத்துவத்துக்கு விசேஷ இதுமளிக்கின்றன.

இறுதியாக கூட்டுத்தலைமைத்துவக் கோட்பாடு, சகல கட்சி ஸ்தாபனங்களும் கூட்டுக் குழுக்களால் உதாரணமாக கமிட்டிகள், சங்கங்களினால் (தனி மனிதரினால்ல) தலைமை தாங்கப்பட்டுள்ளதன் மூலமும் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது. கமிட்டிகளும் சங்கங்களுமான இக்கூட்டுக் குழுக்கள் தாம் கூட்டங்கள், மகாநாடுகள் அல்லது காங்கிரஸ்களுக் கிடைப்பட்ட காலங்களில் ஸ்தாபனத்தின் பணியை வழிப்படுத்துபவை.

சோ. க. க. வின் விதிகளினால் வரையறை செய்யப்பட்டுள்ள விவாதத்துக்கும் விமரிசனத்துக்குமான சுதந்திரமானது கம்யூனிஸ்டுகளிடமிருந்து பிரிக்கமுடியாத உரிமையாகும்.

பிரதான விவகாரங்கள் சகலவற்றிலும் தனது அங்கத்தவர்கள் கொண்டிருக்கும் கருத்துக்களையும் நிலைகளையும் நன்கறிவதற்கு கட்சி விழைகிறது. அதனால்தான் அது விமர்சனம், சுயவிமர்சனம் ஆகியவற்றை இடையறாது மேம்படுத்தியும் ஆதரித்தும் வருகிறது. இதன் வழியே ஒரு ஸ்தாபனத்தின் அல்லது ஒரு நபரின் பணியைத் தெளிவாக மதிப்பிடவும், குறைபாடுகளைக் கண்டுபிடித்து அகற்றவும் முடியும்.

கட்சிக் கூட்டங்களில், மகாநாடுகளில் அல்லது காங்கிரஸ்களில் கட்சியின் உறுப்பினர்கள், அவர்கள் எப்பதவியை வகித்தபோதிலும் எந்தவோரு கம்யூனிஸ்டுகளாலும் விமர்சிக்கப்படலாம். விமர்சனத்தை அடக்குபவர்கள் அல்லது விமர்சித்தவர்களைத் துன்புறுத்துவோர்மீது கட்சி நடவடிக்கை எடுக்கிறது.

சோ. க. க. எப்போதும் குழப்பமற்ற, தெட்டத் தெளிவான, விவேகமிக்க, கோட்பாடு ரீதியான, காரிய சாத்தியமிக்க விமர்சனங்களையே விரும்புகிறது. இந்த

விமர்சனங்கள் உட்கட்சி ஜனநாயகத்தை வளர்க்கவும் கட்சியின் ஒழுங்கு விதிகளை வலுபடுத்துவதாகவும், கம்யூனிஸ்டுகளின் பொறுப்புணர்வுகளை உயர்த்துவதாகவும் இருக்கவேண்டும்.

ஜனநாயக மத்தியத்துவத்தின் பிரதான அம்சமென்ன வெனில் கட்சியின் ஒழுக்கவிதிகள்தாம். இது ஒவ்வொருவருக்கும் உள்ளதே, இவை வெறும் யந்திர ரீதியானவை யல்ல, உணர்வுபூர்வமான ஒழுக்கங்களே. இவை கட்சியின் கொள்கை கொண்டுள்ள பிரச்சினைகளை சுதந்திரமான திறனாய்வுடன் கூடிய விமர்சனத்திலும் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களைச் செயல்படுத்திய முறைகளிலும் இருந்து வகுக்கப்பட்டவையாம்.

கட்சியின் ஒழுக்கவிதிகளும் உட்கட்சி ஜனநாயகமும் ஒன்றுக்கொன்று எதிரானவையல்ல. ஆனால் இரண்டும் சேர்ந்து ஒரு முழுமையான அமைப்பை உருவாக்குகின்றன. உட்கட்சி ஜனநாயகத்தை இடையறாது வளர்த்து வரும் சோ. க. க; கம்யூனிஸ்டுகளது அரசியல் பிரக்ஞையை உயர்த்தவும், கட்சிப் பணிகளில் அவர்கள் மேலும் தீவிரமாகப் பங்கெடுக்கவும் முனைகிறது, ஒழுக்க விதிகளை அபிவிருத்திசெய்கையில் கட்சி, நிர்வாக அமைப்பை சிறப்பாக ஆக்குவதுடன், அது தான் முகம் கொடுத்துள்ள பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய் கிறது.

உட்கட்சி ஜனநாயகமானது பெரும்பான்மைக் கம்யூனிஸ்டுகளது சக்தியையும் எண்ணத்தையும் பிரதிபலிக் கிறது. ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட முன்னர் அது பற்றி விவாதிக்கவும் விமர்சிக்கவும், அதை ஆதரிக்கிறாரா இல்லையா என்பதை வெளியிடவும் ஒரு கம்யூனிஸ்டுகளுக்கு சுதந்திரமுண்டு. ஆனால் அத்தீர்மானம் நிறைவேற்றப் பட்ட பின்னர், பெரும்பான்மையினரது கருத்துக்கு மாறாக அதை எதிர்த்தவர்கள் உட்பட சகல கட்சி அங்கத்தவர்களும் அத்தீர்மானத்தைச் செயல்படுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளனர். கட்சி ஸ்தாபனத்தின் எண்ணம்தான் கம்யூனிஸ்டுகளது உயர் விதியாகும்.

விளதிமிர் லுட்ஸ்கி

# இலட்சக்கணக்கானோரை பயிற்றுவித்த பள்ளி

அனைத்து யூனியன் லெனினிய இளம் கம்யூனிஸ்ட் கழகம் 1918ல் உருவாக்கப்பட்டது. அது தேசவியாபக 100க்கு மேற்பட்ட தேசிய இனங்களையும், இனக் குழுக்களையும் அரவணைத்துள்ளது, ஒவ்வொருவரின் ஆற்றலையும் வெளிக்கொணர்வதும், தேவைகளை நிறைவேற்றுவதுமே இக்கழகத்தின் நோக்கமாகும். எனவே கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களுட்பட பல துறைகளுக்கும் இலட்சக் கணக்கானோரைப் பயிற்றுவிக்கிறது.

1967ல் தேசத்தின் மக்கள் தொகை 23 கோடி 48 லட்சமாக இருந்தபோது ஸ்தல சோவியத்துகளுக்கான பிரதிநிதிகளில் 16.4 சதவீதத்தினர் 30 வயதிற்குட்பட்டோராவர். இது 1977ல் 26 கோடியும்—32.4 சதவீதமாகும். 1979ல் 30 வயதிற்குட்பட்ட 317 பேர் அல்லது 21.1சதவீதத்தினர் சோ, சோ. கு. ஒ. சுப்ரீம் சோவியத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர்; இவர்களில் 207 பேர் அதாவது 13.8 சதவீதம் இ. க, கழகத்தினர்.

அரசியல் சாதனத்திற்கேற்ப இ. க. க.வுக்கு பிரதிநிதிகளை நியமிக்க உரிமையுண்டு. இன்று தேசத்தை இயக்குகின்ற 20 லட்சம் உறுப்பினர்களில் 700,000 பேர் இளையோராவர். பல அமைச்சுகள், இலாகாக்களின் நிர்வாக சபையில் இ. க. க.வினர் அங்கத்தினர்களாயுள்ளனர். 1974 முதல் 1977 வரை அரசு, பொது ஸ்தாபனங்களுடன் சேர்ந்து இ. க. கழகம் தொழில், கல்வி, வாழ்க்கைத் திட்டம், இளையோரின் ஆய்வு என்பன சம்பந்தமான 945 தீர்மானங்களை மேற்கொண்டுள்ளது.

தொழில், திருமணம், குடும்பம், கல்வி சம்பந்தமான அடிப்படைப் பிரச்னைகள் சம்பந்தமான சட்டதிட்டங்களை உருவாக்குவதிலும் இ. க, க,வினர் முனைப்பாகப் பங்குபற்றுகின்றனர்.

தொழிற்சங்கங்கள், விளையாட்டுச் சங்கங்கள், எழுத்தாளர் சங்கங்கள், ஏனைய ஸ்தாபனங்களுடனெல்லாம் இ. க. க. ஒத்துழைக்கிறது. தொழிற்சங்க கமிட்டிகளுக்கு சுமார் 15 லட்சம் இளையோர் தெரிவு செய்யப்பட்டனர். மக்கள் கட்டுப்பாட்டுக் குழுக்களில் 10 லட்சத்திற்குமதிகமானோர் இ. க. க.வினர்.

19 சர்வதேச சுற்றுலா விடுதிகள் போன்ற பல கட்டிடங்களுக்கு இ. க. க. நிதியுதவியளித்துள்ளது.

இ. க. க. கட்டுப்பாட்டில் 3 புத்தக வெளியீட்டு ஸ்தாபனங்கள், 234 பத்திரிகைகள், சஞ்சிகைகள் (விற்பனை 7 கோடி 60 லட்சம் பிரதிகள்) என்பனவும் இருக்கின்றன. சுமார் 300 -வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புக் குழுக்களில் இ. க. க.வினர் பங்கு பற்றுகின்றனர்.

சுமார் 420,000 ஆரம்ப இ. க. க. ஸ்தாபனங்களுள்ளன.

இ. க. க.வை வழிநடத்துவதில் இன்றைய நிலைமைகளில் கட்சி சிக்கலான கடமைகளை எதிர்கொள்கிறது. 1976ன் சோ. க. க, 25வது காங்கிரஸில் சோ. க. க. மத்திய கமிட்டி பொதுச் செயலாளர் எல். ஐ. பிரெஷ்னேவ் இப்படிக் குறிப்பிட்டார். "எந்த நல்ல முயற்சியிலும் பங்குபற்ற அவர்கள் உண்மையாகவும், மனப்பூர்வமாகவும் தயாராயுள்ளனர். ஆனல் அவர்களின் உணர்ச்சி வேகத்தைத் தணிக்கக்கூடிய கல்வி சம்பந்தமான சம்பிரதாயபூர்வமான, அதிகாரத்தனமான அணுகுமுறைகளுக்கு மாறுக விடுக்கின்றனர். எவ்வாருயினும், இந்த உணர்ச்சி வேகத்தை காப்பது மட்டுமல்ல அதை ஊக்குவிப்பதே எமது கடமையாகும். தமது ஆர்வம். புத்திகூர்மை, யௌவன சக்தி என்பவற்றை வாழ்நாளெல்லாம் அவர்கள் பேணவேண்டுமென்பதும் எமது வேணவாவாகும்."

25வது சோ. க. க. காங்கிரஸில் இளம் கம்யூனிஸ்ட் கழகத்திற்கு கட்சியின் "நேரடியான, போராட்டப்படை" என்ற பண்புவமை தரப்பட்டது. இது வெறும் சொல்லல்ல அதுவே உண்மையுமாகும்!

# இளம் கம்யூனிஸ்ட் கழகம்—இன்று

அனைத்து யூனியன் லெனினிய இளம் கம்யூனிஸ்ட் கழகம் 1918 அக்டோபர் 29 ல் உருவாக்கப்பட்டது. கொம்ஸமோல் என்று அழைக்கப்படுகின்ற இந்த இளம் கம்யூனிஸ்ட் கழகமே 14-18 வயதிற்குட்பட்ட மூன்று கோடி எண்பது லட்சம் உறுப்பினர்களாக யுவர்களையும் யுவதிகளையும் கொண்ட மிகப் பெரிய சோவியத் இளையோர்ஸ் தாபனமாகும்.

★

இளம் கம்யூனிஸ்ட் கழகம் கம்யூனிஸ்ட் கட்சியின் வழிநடத்தலை ஏற்றுக் கொள்கிறது. இக் கழகமே சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கான உறுப்பினர்களை நிரப்பும் பிரதான ஸ்தாபனம்.

★

இளம் கம்யூனிஸ்ட்கழகத்தின் 62 சதவீதத்திற்குமதிகமானோர்உயர்கல்வியை அல்லதுமுற்றுப் பெறாத உயர் கல்வியையும் நடுத்தரக் கல்வியையும் பெற்றோராவர். 42 சதவீதமானோர் வேறு கல்வி ஸ்தாபனங்களிற் பயில்கின்றனர்.

ஒரு கோடி 17 லட்சம் மாணவர்கள் இளம் தொழிலாளர்கள், கூட்டு விவசாயிகள் பள்ளி, மாணவர்கள் தொழிற்கல்வி பயில்வோர், விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப ஆகியபணிகளில் ஈடுபடுகின்றனர்; பௌதிகம், ரஸாயனம் எண்கணிதம் போன்ற அனைத்து யூனியன் போட்டிகளில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றுகின்றனர். பொதுக் கல்விக்கான சோவியத் அமைச்சுடன் இணைத்து இ.க.க மத்திய கமிட்டி ஏற்பாடு செய்கின்ற விஞ்ஞான தொழில் நுட்ப, உற்பத்தி வாரங்களில் சுமார் ஒரு கோடி 60 லட்சம் பள்ளி மாணவர்கள் பங்கேற்கின்றனர்.

சோவியத் யூனியனில் 250,000க்கு மேற்பட்ட இளையோர் ஸ்தாபனங்களும் 800 மாணவர் டிசைன் பீரோக்களும் (இவற்றில் 25 வட்சம் பேருள்ளனர்) உள்ளன. விஞ்ஞான தொழில்நுட்ப எய்தல்களுக்கான பரிசுகளை லெனினிய இ.க.க.1967 ல் ஆரம்பித்து ஆண்டுதோறும் வழங்கி வருகிறது.

🌐

இன்று இ.க,க.வும் சோவியத் யூனியனின் இளையோர் ஸ்தாபனங்களின் கமிட்டியும் 1350 தேசிய பிராந்திய சர்வதேச இளையோர் மற்றும் மாணவர் ஸ்தாபனங்களுடன் (130 நாடுகளில்) தொடர்பு கொண்டுள்ளன.

சோ.சோ.கு.ஒ. சர்வதேச இளையோர் பிரயாண பீரோவானது எல்லாக் கண்டங்களிலுமுள்ள 80 நாடுகளின் 500ஸ்தாபனங்களுடன் தோடர்புகளை மேற்கொண்டுள்ளது.

# எமது சுலோகம்-சர்வதேசியம்

> சோவியத் இளைஞர் ஸ்தாபனத்தின் கமிட்டியின் தலைவரான கென்னடி யான யேவின் பேட்டியைக் கீழே தருகிறோம்.

சோஷலிஸ வாழ்க்கை முறையின், சோவியத் மக்களது ஒவ்வொருதலை முறையினரதும் உலகக் கண்ணோட்டத்தின், நம்பிக்கைகளின் தலையாய அம்சமாக என்றும் திகழ்வது சர்வதேசியம்தான் இவ்வாறு கூறினார் கென்னடி யானயேவ். சோவியத் அரசாங்கத்தின் உதயத்தின்போது, கடும் சோதனை மிக்க உள்நாட்டு யுத்த ஆண்டுகளின் (1918-1920)போது, பட்டினியும், பொருளாதாரச் சீர்குலைவும் மிகுந்த அந்த நாட்களில் ரஷ்யாவின் இளம் மக்கள், வெளிநாடுகளின் இளைஞர் ஸ்தாபனங்களுக்கு உதவி செய்வதற்காக நிதிசேகரித்தனர்.

இன்று இதர நாடுகளுடனை நட்புறவையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்துவதும் உலக சமாதானத்தைப் பேணி வலுப் படுத்துவதும் உயர்கோட்பாடுகளாக சோவியத் அரசியல் யாப்பில் இடம்பெற்றிருப்பதுடன் சோவியத் இளைஞர்களது சர்வதேச நடவடிக்கைகள் யாவற்றினதும் அடியாதாரமாகவுள்ளன.

இந்நடவடிக்கைகளின் வீச்சை வெளிப்படுத்துவதற்காக நான் சில உதாரணங்களைத் தருகிறேன். இளம் கம்யூனிஸ்ட் லீக்கின் மத்திய கமிட்டியும் சோவியந் இளைஞர் ஸ்தாபனங்களின் கமிட்டியும் 130 நாடுகளின் 1,350 சர்வதேச, பிராந்திய தேசிய இளைஞர். கழகங்களுடனும் சங்கங்களுடனும் ஒத்துழைப்புக்களை மேற்கொண்டுள்ளன. கடந்த நான்காண்டுகளில் ஏறத்தாழ ஆயிரம் வெளிநாட்டு இளைஞர் தூதுகோஷ்டிகள் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்துள்ளன. அதே அளவு சோவியத் இளைஞர் தூது கோஷ்டிகள் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்துள்ளன. உல்லாசப் பயணம் என்பது சர்வதேச ஒத்துழைப்பில் ஒரு பிரபலமான, வரவேற்கக்கூடியகூறுக

மாறியுள்ளது. சோவியத் யூனியனின் ஸ்பூட்னிக் சர்வதேச இளைஞர் பயணக்கழகம் உலகிலுள்ள 80 நாடுகளில் 500 பயண ஏஜன்ஸிகளைக் கொண்டுள்ளது.

உலக ஜனநாயக இளைஞர்களது அதிகாரபூர்வமான மிகப்பெரிய ஸ்தாபனங்களான ஜனநாயக இளைஞர்களின் உலக சம்மேளனத்திலும் சர்வதேச மாணவர்களது சங்கத்திலும் சோவியத் இளைஞர்கள் மிக உறுதியுடன் செயலாற்றுகின்றனர்.

சோவியத் யூனியனிலுள்ள இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் இதர சோஷலிஸ நாடுகளிலுள்ள அவர்களது சகபாடிகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்கள் விரிவடைந்து வருகின்றன. குறிப்பாக இவர்கள் சி.எம்.இ.ஏ. அங்கத்துவ நாடுகள் நிறைவேற்றிய சோஷலிஸப் பொருளாதார முழுமைப்பாட்டின் பரந்த வேலைத் திட்டத்தினைச் செயல்படுத்துவதில் அவர்கள் கூட்டாகப் பங்கெடுத்துவருகின்றனர்.

சமூக விஞ்ஞானத்துறையில் மாணவர்களின் அதிசிறந்த பணிக்கும் வேலைத்திறனுக்குமான போட்டிகள் ஒழுங்காக நடைபெறுகின்றன.

சமாதானம், தேசிய சுதந்திரம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றுக்காக ஏகாதிபத்தியத்தை எதிர்த்த உலக இளைஞர்களது போராட்டத்தில் சோவியத் யூனியனின் இளம் மக்கள் தீவிரமாக உழைக்கின்றனர். வீரமிகு வியத்நாம், தெற்காபிரிக்கா, அரபுநாடுகள் ஆகியவற்றின் மக்களுடனும் இளைஞர்களுடனும் சிலியின் ஜனநாயகவாதிகளுடனும் சோவியத் இளம் மக்கள் ஒருமைப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். ஏகாதிபத்தியத்துக்கும் பிற்போக்கிற்கும் எதிரான போராளிகளுடனான ஒருமைப்பாட்டு வாரங்கள், உழைப்பு நாட்கள் ஆகியவற்றை அனுஷ்டிக்கிறார்கள். சிலியின் தேசபக்தர்களுக்காக ஒருமைப்பாட்டு நிதி சேகரிக்கிறார்கள்.

முதலாளித்துவ நாடுகளின் இளைஞர் ஸ்தாபனங்களுடனான ஒத்துழைப்புக்கள் தொழிலாளிவர்க்க சர்வதேசிய கோட்பாட்டினடிப்படையில் வளர்ந்து வருகிறது. பிரான்ஸ் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு பின்லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளின் இளம் கம்யூனிஸ்ட் லீக்குகளுடனான சர்வதேச முகாம்கள், நட்புறவு வாரங்கள் கடந்த சில ஆண்டுகளில் பிரபல்யம் பெற்றுள்ளன.

வளர்முகநாடுகளின் முற்போக்கு, ஜனநாயக இளைஞர் ஸ்தாபனங்களுடன் தொடர்புகள் வலுப்பட்டுவருகின்றன. கடந்த ஐந்தாண்டுகளில் ஆசிய, ஆபிரிக்க, லத்தினமரிக்க

நாடுகளிலிருந்தும் மத்தியகிழக்கிலிருந்தும்400க்குமதிக தூது கோஷ்டிகளை சோவியத் இளைஞர்கள் வரவேற்றுள்ளனர் விடுதலையடைந்த 40 நாடுகளின் பொருளாதார கலாசார வளர்ச்சிக்கு உதவுவதில்சோவியஇளம்மக்கள் நேரடியாகவே சம்பந்தப்பட்டுள்ளனர். தொழிலகங்கள், பள்ளிகள், ஆஸ்பத்திரிகள் போன்றவற்றைக்கட்ட அவர்கள் உதவுகிறார்கள்.

உலக ஜனநாயக இளைஞருடன் சேர்ந்து சோவியத் யூனியனின் இளம் மக்கள் சமாதானத்துக்கும் சர்வதேச ஒத்துழைப்புக்குமான போராட்டத்திற்குப் பங்காற்றுகிறார்கள்.

பல சர்வதேச நிகழ்வுகளை சோவியத் மக்கள் ஏற்பாடுசெய்துள்ளனர், உதாரணமாக 1975 ல் மாஸ்கோவில் நடைபெற்ற இளம் பெண்களது உலக மகாநாட்டையும்— இதில் 235 தேசிய இளைஞர் மாணவர் சங்கங்களிலிருந்தும் 22 சர்வதேச பிராந்திய ஸ்தாபனங்களிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்—''கதிரவன் என்றும் பிரகாசிக்கட்டும்'' என்ற முதலாவது சர்வதேசிறுவர் விழாவையும் குறிப்பிடலாம்.

கடந்த ஆண்டில் நடைபெற்ற இளம் கம்யூனிஸ்டுகளது 18 வது காங்கிரஸ், சிறுவர்களது உரிமைக்கான சர்வதேச மகாநாட்டையும் இளைஞருக்கும் மாணவருக்கும் கல்வியையும் கலாசாரத்தையும் அளிப்பது பற்றிய உலக மகாநாட்டையும் ஆயுதப் போட்டிக்கு முடிவுகட்டுவதற்கும் ஆயுதப்பரிஹரணத்துக்குமான இளம் சமாதான வீரர்களது சர்வதேச அரங்கொன்றையும் நடாத்த வேண்டும் என்பது உட்பட பல முக்கிய தீர்மானங்களை முன்வைத்துள்ளது. இத்தீர்மானங்களுக்கு ஹவானாவில் நடைபெற்ற பதினோராவது உலக இளைஞர், மாணவர் விழாவில் பரந்த ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒலெக் பொகொமலேவ்
(சோவியத் விஞ்ஞானப் பேரவையின் தொடர்பு உறுப்பினர்)

# ப. பொ. உ. க. வும் வளரும் நாடுகளும்

**ஒரு நீதியானதும் ஜனநாயக ரீதியானதும் அடிப்படையில் சர்வதேச பொருளாதார உறவுகளை மாற்றியமைப்பதற்கான இயக்கம் வலுத்து வருகின்ற சூழலில் சோஷலிஸ நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்குமிடையிலான பொருளாதார ஒத்துழைப்பின் நெறிமார்க்கங்களதும், புதிய நியமங்களதும் முக்கியத்துவம் மேலும் துலாம்பரம் பெறுகின்றது.**

ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சில் (ப. பொ உ. க.)1 நாடுகளுக்குமிடையிலான பொருளாதார உறவுகள் சர்வதேச ஒத்துழைப்பின் பொதுவான கோட்பாடுகளின் அனுஷ்டானத்துக்கான ஒரு ஆதர்ஸம் என்று கூறுவதாயின் அது ஒரு சம்பூர்ணமான மதிப்பீடாக இருக்க முடியாது. ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் இந்த இரு கோஷ்டி நாடுகளின் நலன்கள் ஒருசேர இருப்பதன் காரணமாக இவ்விரு நாடுகள் குழாங்களுக்குமிடையிலான உறவுகளானவை, வளரும் நாடுகளின் தேசிய சுயாதிபத்தியத்துக்

---

1 ப. பொ. உ. க: சோஷலிஸ நாடுகளைக் கொண்ட சர்வதேச பொருளாதார நிறுவனம். தற்போது இதில் பல்கேரியா, ஹங்கேரி, வியத்நாம், ஜெ. ஜ. கு, கியூபா, மொங்கோலியா, ருமேனியா, சோவியத் யூனியன் செக்கோஸ்லவாக்கியா, போலந்து ஆகியன அங்கம் வகிக்கின்றன.

கும், சுயாதீன வளர்ச்சிப் போக்கினுக்கும் பன்முகரீதியிலும் உதவி நல்குவதற்கு சோஷலிஸ நாடுகளுக்குள்ள விழைவினைத் தெளிவாகத் துலாம்பரப்படுத்துவனவாக உள்ளன. இவ்வகையான உறவுகளைப் பேணுவதில் ப. பொ. உ. க. நாடுகள் எதுவிதமான ஒருதலைப்பட்ட நலன்களையும் கருத்திற் கொண்டனவாயில்லை; மாறாக நீதி, சமத்துவம், பரஸ்பர ஆதாயம் மக்களின் ஒருமைப்பாடு ஆகியவற்றுக்காகவே அவை பாடுபடுகின்றன.

புதிதாகச்சுயாதீன மடைந்த நாடுகளின் உள் விவகாரங்களில் எந்தவித் தலையீடு மேற்கொள்ளப் படுவதையும் கண்டிக்கும் அதே வேளையில் சோஷலிஸ நாடுகளானவை, இளம் நாடுகளின் தேசிய சுயாதீனத்தை உறுதிப்படுத்துவதற்கும், கலோனியலிஸத்தின் எச்ச சொச்சங்களை இல்லாதொழித்து பூரண ராஜ்ய சுயாதிபத்தியத்தை வென்றெடுப்பதற்கும் முன்னேற்ற வளர்ச்சி மார்க்கத்தில் முன் செல்லுவதற்கும் முடிந்த உதவிகளை ஆற்றுவதைத் தமது தலையாய கடமையெனக் கருதுகின்றன. பொருளாதார ரீதியில் கலோனியல் ஆட்சியாதிக்கத்தின் பின்விளைவுகளை இல்லாதொழித்தல், தேசிய பொருளாதாரத்தினை வலுப்படுத்தல், நவீன உற்பத்திச் சக்திகளை வளர்த்தெடுத்தல், தேர்ச்சி பெற்ற தொழிலாளரணியைப் பயிற்றுவித்தல் முதலானவை ஏகாதிபத்தியத்தினை எதிர்த்துப் போராடும் இளம் நாடொன்றின் முக்கிய பணிகளாக உள்ளன. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க கண்டங்களில் புதிதாகச் சுயாதீனம் பெற்ற நாடுகளுக்கு இத்தகைய துறைகளிற்தான் சோஷலிஸ நாடுகளின் ஆதரவும் உதவியும் தேவைப்படுகின்றன.

சோஷலிஸத்துக்கும் முதலாளித்துவத்துக்குமிடையிலான சக்திகளின் சமநிலையில் ஏற்பட்டுள்ள அடிப்படைபூர்வமான மாற்றமும் இணக்க அமைதிப் போக்கின் முன்போதலும் சர்வதேச பொருளாதார மன்றங்களில் வளரும் நாடுகள் முன்வைக்கும் பல கோரிக்கைகளுக்கு உறுதுணை செய்யக் கூடிய முன்தேவைகளை உருவாக்கியுள்ளன.

வளரும் நாடுகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவு காட்டும் அதே வேளையில், சோஷலிஸ நாடுகளானவை நடைமுறையில் சர்வதேச பொருளாதார உறவுகள் பற்றிய புதிய கோட்பாடுகளையும் நெறிகளையும் நிறுவத் தலைப்பட்டுள்ளன. புதிதாகச் சுயாதீனமடைந்த நாடுகளில், முதலாளித்துவ நாடுகள் முன்னெப்போதும் செய்யத் தலைப்படிருக்காதவகையில், முக்கிய தொழிற்துறையை நிறுவுவதற்கான தொழில்நுட்ப உதவிகளை இலகுவான கடன் ரீதியில் சோஷலிஸ நாடுகள் செய்ய முன்வந்தமையை இங்கு குறிப்பிடலாம். ஐந்தாண்டுத்திட்டம் மற்

றும் நீண்ட காலத் திட்ட அடிப்படையில் புதிதாகச் சுயாதீனம் பெற்ற நாடுகளுடன் சோஷலிஸ நாடுகள் பொருளாதாரத் தொடர்புகளைப் பேண முன்வந்துள்ளன.

உலக வியாபகமான பொருளாதார உறவுகளை ஜனநாயகமயப்படுத்துவது தொழிற்துறைமயத்தின் பெருக்கத்தினுக்கும், அந்நியச் சந்தையில் தங்கியுள்ள இளம் நாடுகளின் சமூக முன்னேற்றத்துக்கும் பெரிதும் துணை செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

## வர்த்தக வளர்ச்சி

வர்த்தகத் தொடர்புகளானவை சோஷலிஸ நாடுகளுக்கும்வளரும் நாடுகளுக்குமிடையிலான பொருளாதார உறவுகளின் முக்கிய பாலமாகத் திகழுகின்றன. இவ்விரு நாடுகள் குழாங்களுக்குமிடையிலான வர்த்தகப் பரிவர்த்தனை ஆண்டுதோறும் பெருகி வருகின்றது. 1960ல் ப.பொ உ.க. நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்குமிடையிலான வர்த்தகப் பட்டுவாடா 170,000 லட்சம் றூபிள்களாக இருந்த அதே வேளையில், 1977ல் இது 160,000லட்சம் றூபிள்களாக, அதாவது, 9.3 மடங்குகளால்அதிகரித்துள்ளது. இக்காலகட்டத்தின் சராசரி பண்டமாற்று விகிதம் 12.1 சதவீதமாகவிருந்தது.

சோஷலிஸ நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத்தின் மொத்த அளவு இன்னும் பாரிய தொன்றாகப் பெருகிவிடவில்லையாயினும், அது காலப் போக்கில் வளர்ந்து பெருகுவதற்கான சாந்தியப்பாடுகள் உள்ளன. வளரும் நாடுகளின் வெளிநாட்டு வர்த்தக உறவுகளில் ப.பொ.உ.க. நாடுகளின்பங்கு 1960ல் 6.9 சதவீதமாகவும், 1970ல் 9.1 சதவீதமாகவும், 1975ல் 9.4 சதவீதமாகவும் இருந்தது. 1977ல் இது 10 சதவீதமாக அதிகரித்துள்ளது.

சோஷலிஸ நாடுகள் வளரும் நாடுகளுடன் பேணி வரும் வர்த்தகத்தில் புவியியல் ரீதியான செறிவு கடந்த 10-15 ஆண்டுகளில் குறிப்பிடக்கூடியளவுக்கு ஸ்திரமானதாகவே இருந்து வந்துள்ளது. இந்த வர்த்தகதொடர்புகளில் அரைப்பங்கினுக்கும்அதிகமானவை ஆசிய நாடுகளுடனும், 35 சதவீதமானவை ஆபிரிக்க நாடுகளுடனும், 10-15 சதவீதமானவை லத்தீன் அமெரிக்க நாடுகளுடனும் பேணப்பட்டு வருகின்றன.

நீண்டகால அடிப்படையிலான வர்த்தக ஒப்பந்தங்களும், தொழில்நுட்ப உதவி உடன்படிக்கைகளும் பண்டப் பரிவர்த்தனைக்கான ஒரு ஸ்திரமான அடித்தளத்தை யிட்டிருப்பதுடன் வளரும் நாடுகள் தமது மரபார்ந்த

பொருட்களை (எரிபொருள், மூலப்பொருட்கள், விவசாய உற்பத்திகள்) மட்டுமன்றி புதிய தொழிற்துறை உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கும் வகை செய்கின்றது.

1970ம் ஆண்டுகளில் ப.பொ.உ.க. நாடுகள் வளரும் நாடுகளிலிருந்தான, குறிப்பாக, இந்தியா, பிறேஸில், ஆர்ஜன்ரீனு முதலான நாடுகளிலிருந்தான புடவை, ஆடையணிகள், பாதணிகள் ஆகியவற்றின் கொள்வனவை அதிகரித்துள்ளன. ப.பொ.உ.க. நாடுகளிலிருந்து தொழிலக இணைப்புகள் மற்றும் உபகரணங்களை வளரும் நாடுகள் இறக்குமதி செய்வது அதிகரித்து வரும் பட்சத்திலும், இது, நாடுகளிலிருந்து ப.பொ.உ.க. நாடுகள் கொள்வனவு பொருட்களின் அளவினைக் காட்டிலும் ஒரு சதவீதத்தாலுஞ் சரி அதிகரித்து விடவில்லை. வளரும் நாடுகளில் தொழிற்துறைமயத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருவதும், இத்தகைய இறக்குமதி மேலும் அதிகரிப்பதற்கான சாத்தியப்பாடுகளைத் தோற்றுவித்துள்ளன.

## பொருளாதார ஒத்துழைப்பு வடிவங்கள்

பொருளாதார, தொழில்நுட்ப உதவி, மற்றும் நிபுணத்துவப் பரிவர்த்தனை தொடர்பான உறவுகளின் ஒரு பகுதியாக வர்த்தக உறவுகளும் மாறி வருகின்றன. 1970ம் ஆண்டுகளின் நடுப்பகுதியில், வளரும் நாடுகளிலிருந்து சோவியத் யூனியன் செய்து கொண்ட இறக்குமதிகளில் ஏறத்தாழ அரைப்பங்கு வளரும் நாடுகள் பெற்ற அபிவிருத்திக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதைச் சரி செய்து கொள்ளுவதற்கே வகை செய்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இது பரஸ்பரம் ஆதாயமுள்ள வர்த்தகப் பரிவர்த்தனை விஸ்தாரம் பெறுவதற்கான வாய்ப்புக்களைத் தோற்றுவிக்கின்றது.

புதிதாகச் சுயாதீனமடைந்த நாடுகளுக்குச் சோஷலிஸ நாடுகள் வழங்கி வரும் தொழில்நுட்ப உதவி அதிகரித்து வருகின்றமை மரபார்ந்த சர்வதேச தொழில் பகுப்பு அமைப்பின் மீது குறிப்பிடத்தக்க சாதகமான பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. ப.பொ.உ.க. நாடுகளுடன் செய்து கொண்டுள்ள தொழில்நுட்ப உதவி உடன்படிக்கைகள் அமுல்படுத்தப்படுவதன் வாயிலாகச் சம்பந்தப்பட்ட வளரும் நாடுகள் ஆண்டொன்றுக்கு தமது உருக்கு உற்பத்தியினை 300 லட்சம் தொன்களினலும், எண்ணெய் உற்பத்தியை 600 லட்சம் தொன்களினலும், சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலிய உற்பத்தியை 300 லட்சம் தொன்களினலும், மின் சக்தி உற்பத்தியினை 160

லட்சம் கிலோவாட்டுகளினுலும் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

ப.பொ.உ.க. நாடுகள் வளரும் நாடுகளுக்கு விவசாயத்துறையில் வழங்கிவரும் உதவி அதிகரிக்கப்பட்டு வருகின்றது. வளரும் நாடுகளில் 149 விவசாயத்துறைத் திட்ட நிர்மாணத்துக்கு சோவியத் யூனியன் உதவி வழங்கி வருகின்றது. இவற்றுள் 73 திட்டங்களின் நிர்மாண வேலைகள் ஏற்கனவே பூர்த்தியாகி அவை இயங்கவும் ஆரம்பித்துவிட்டன. வளரும் நாடுகளின் நீர்ப்பாசனத் திட்ட நிர்மாண வேலைகளில் சோஷலிஸ நாடுகளின் பங்கெடுப்பினுல் வளரும் நாடுகளில் நீர்ப்பாசனத்துக்குட்படும் பிரதேச அளவு 30 லட்சம் ஹெக்டர்களால் அதிகரிக்கும். பிரபுத்துவ உறவு முறை வழிப்பட்ட நில உறவுகள் இல்லா தொழிக்கப்படுவது உட்பட வளரும் நாடுகளில் நிலச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்ற விதியிலும் கதியிலுமே விவசாயத்துறையிலான ஒத்துழைப்பு பெருகுவதற்கான வாய்ப்புக்கள் பெரிதும் தங்கியிருக்கும்.

ப.பொ.உ.க. நாடுகள் வளரும் நாடுகளுக்கு வழங்கி வரும் தொழில்நுட்ப உதவியானது, இந்த இருதரப்பு நாடுகளினது பொருளாதார கட்டுமானங்கள் கூடுதல் ரீதியில் ஒன்றுக்கொன்று ஒத்தேகும் விதத்தில் இந்நாடுகள் மத்தியில் ஸ்திரமான தொழிற்பகுப்பு உருவாகுவதற்குத் துணை செய்யும் காரணியாக மாறி வருகின்றது. இந்நாடுகள் மத்தியில் உற்பத்தித்துறையில் ஒத்துழைப்பு அதிகரித்து வருவது இதற்கான நல்ல சான்றாக உள்ளது.

உற்பத்திகள் மார்க்கமாக கடனைத் திரும்பிச் செலுத்தும் அடிப்படையில் உற்பத்தித் துறையிலும் தொழில் நுட்ப உதவித்துறையிலும் ஒத்துழைப்பினைப் பேணி வருவது சாதகமான பல பெறுபேறுகளை நல்கியுள்ளது. இத்தகைய ஈட்டு உடன்படிக்கைகளுக்கான பல உதாரணங்கள் உள்ளன.

ஈட்டு—உடன்படிக்கைகளின் அடிப்படையிலான ஒத்துழைப்பு வளரும் நாடுகளின் மரபார்ந்த மற்றும் உற்பத்திப் பொருட்களுக்குப் ப.பொ.உ.க, நாடுகளில் ஒரு ஸ்திரமான சந்தையினை உருவாக்கித்தருகின்றன. சோஷலிஸ நாடுகளைப் பொறுத்தளவில் இத்தகைய ஒத்துழைப்பு தமது எந்திர,உபகரண ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கும்எரிபொருள் மூலம் பொருட்கள் முதலானவற்றினைப்பொறுத்த நம்பகமான ஊற்றுவாய்களை உத்தரவாதப்படுத்திக் கொள்ளுவதற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

வளரும் நாடுகளுடன் சோஷலிஸ நாடுகள் பேணி வரும் ஒத்துழைப்பின் பிறிதொரு சிறப்பியல்பு என்னவெனில், தேசிய விமோசனப் போராட்டத்தில் தீவிரமாக

ஈடுபட்டுள்ள, முற்போக்கு அரசியல் வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைத்துள்ள நாடுகளுடனேயே இந்த ஒத்துழைப்பு தீவிரமாக விஸ்தரிக்கப் படுவதாகும். ப.பொ.உ.க நாடுகள் அங்கோலா, ஆப்கானிஸ்தான், ஈராக், மொஸம்பிக், சிரியா, எதியோப்பியா, முதலான நாடுகளுடனும், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் சோஷலிஸ நாடுகளைத் தமது இயல்பான கூட்டாளிகள் எனக் கருதும் நாடுகளுடனும் வெற்றிகரமான பொருளதார, தொழில் நுட்ப ஒத்துழைப்பினைப்பேணி வருகின்றன.

கணிசமான அளவு பொருளாதார ஆற்றலைக் கொண்டவையும், ஓரளவுக்கு வளர்ச்சி பெற்ற நவீன பொருளாதாரக் கட்டமைவினைக் கொண்டவையுமான பல ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் ப.பொ.உ.க.நாடுகளின் பங்குதாரர்களில் முக்கிய ஸ்தானங்களை வகிக்கின்றன. இவற்றுள் இந்தியா, துருக்கி, பாகிஸ்தான், ஆர்ஜன்ரீரு, பேரு பிரேஸில் முதலானவை அடங்கும்.

நீண்டகால (10-15ஆண்டுகள்) ஒத்துழைப்பு உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்படுவது தற்போது பரவலாக அதிகரித்து வருகின்றது. இத்தகைய உடன்படிக்கைகள் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் மத்தியில் பரஸ்பர, நம்பிக்கையை வலுப்படுத்துவதுடன் இருதரப்பு தொடர்புகளுக்கு ஒரு ஸ்திரமான திட்டமிடப்பட்ட இயல்பினையுஞ் சேர்த்து விடுகின்றன.

சோஷலிஸ நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்குமிடையில் பொருளாதார ஒத்துழைப்பினைப் பெருக்கிக் கொள்ளுவதற்கும் அதற்குப் புதிய வடிவங்களில் வலுச் சேர்த்துக் கொள்ளுவதற்குமான மிகச் சாதகமான பொருளாதார, அரசியல் சூழ்நிலைமைகள் இன்று உள்ளன. இச்சாத்தியப்பாடுகளிலின்றும் கூடுதல் பயனைப் பெறும் பொருட்டு உலக சோஷலிஸத்துக்கும் தேசிய விமோசன இயக்கத்துக்குமிடையிலான ஐக்கியத்தின் சத்துராதிகளுக்கு எதிராக மஹாவல்லரசுகள் என்றவாருன டோலிச்சூத்திரங்களை முன்வைத்து இளம் நாடுகளைச் சோஷஸ நாடுகளுக்கு எதிராக முடுக்கி விட முனைபவர்களுக்கு எதிராகவும் இடையருத போராட்டம் நடாத்தப்பட வேண்டும் தேசிய சுயாதீனம் சர்வதேச உறவுகளில் சமத்துவம், பொருளாதார, சமூக. முன்னேற்றம் ஆகியவற்றுக்காகப் போராடும் எல்லா நாடுகளுக்கும் சோஷலிஸ நாடுகள் ஆதரவு வழங்குன்றன.

ஏ, ஷிதாஜேவ்

# ஜனநாயகக் கட்சிகளும் சோஷலிஸ நிர்மாணமும்

> சோஷலிஸ நிர்மாணத்தில் குட்டி பூர்ஷ்வா ஜனநாயகக் கட்சிகளின் சமூக-அரசியல் பாத்திரம் பற்றிய பிரச்னையும் அவை பற்றிய மார்க்ஸிய-லெனினிய கட்சிகளின் மனப்பாங்கும் விஞ்ஞான சோஷலிஸ தத்துவத்திலும் நடைமுறையிலும் துலாம்பரமாகத் தெரிகிறது.

நகர்ப்புற, நாட்டுப்புற குட்டிப் பூர்ஷ்வா பகுதியினரைக் கொண்ட குறிப்பாக சமூக அடிப்படையில் நடுத்தர விவசாயிகளாயிருப்போரைக் கொண்ட குட்டி பூர்ஷ்வா கட்சிகள் சோஷலிஸ நிர்மாணத்தில் பங்குபற்றுகின்ற சாத்தியம் இருக்கின்றது.

## ரஷ்ய கட்சிகளின் ஒத்துழைப்பு

மார்க்ஸிய—லெனினிய கட்சியால் வழிநடத்தப்படுகின்ற தொழிலாள வர்க்கமானது சோஷலிஸ நிர்மாணத்தில் நகர, நாட்டுப்புற மத்திய தரத்தினர் பங்குபற்றுவதை ஏற்படுத்துகிறது. தொழிலாள மக்களின் இப்பகுதியினரின் நலன்களை வெளிப்படுத்துகின்ற குட்டி பூர்ஷ்வா கட்சிகளுடன் ஒத்துழைப்பதை அவர்கள் வரவேற்கின்றனர். லெனின் இவ்விதம் குறிப்பிட்டார்: ''பூர்ஷ்வாக்களையும், நிலவுடைமையாளர்களையும் மிகக் கடுமையாக ஒழிக்க முயலும் அதே நேரத்தில் நாம் குட்டி பூர்ஷ்வா ஜனநாயகவாதிகளையும் வென்றெடுக்கவேண்டும்'' 1 தொடர்ந்து அவர் ''எமது நடவடிக்கைகளின் பல துறைகளிலும் கம்யூனிஸ்டுகளல்லாதோரின் இணைப்பின்றி வெற்றிகரமான கம்யூனிஸ நிர்மாணம் அமைய முடியாதென்பதில் ஐயமிருத்தலியலாது'' 2 பாட்டாளி வர்க்கமற்ற ஜனநாயகக் கட்சிகளுடன் இணைப்பை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சி கொள்கைகளின் அடிப்படைக்கு இந்த முக்கிய கோட்பாடுகளே காரணமாயிருந்தன,

---

1 வி. ஐ, லெனின், தொகுப்பு நூல்கள், பா. 28, பக் 212
2 ,, ,, ,, பா, 33, பக் 227

சோஷலிஸப் புரட்சிக்குப் பின்னர்கூட குட்டி பூர்ஷ்வாக்களின் பொருளாதார நிலைமையானது அவர்களை அரசியலதிகாரத்தை வெற்றெடுத்த பாட்டாளி வர்க்கத்திற்கும் கவிழ்க்கப்பட்டாலும் இன்னமும் இருக்கின்ற பூர்ஷ்வாக்களுக்குமிடையே ஊசலாடச் செய்தது. எனவே குட்டி பூர்ஷ்வாக்கள் உழைப்பவர்கள் என்ற ரீதியில் பாட்டாளிகளின் பக்கமும் சிறு சொத்துடைமையாளர் என்ற ரீதியில் பூர்ஷ்வாக்களின் பக்கமும் இழுக்கப்பட்டனர். தள்ளாட்ட மிக்க, இரட்டைத் தன்மை மிக்க, தன் சார்புநிலை மாறும் தன்மை மிக்கதே குட்டி பூர்ஷ்வா கட்சிகளின் பண்பாகும். குட்டி பூர்ஷ்வா கட்சிகளின் இவ்வித இரட்டைத் தன்மையே அவர்களைப் பற்றிய கம்யூனிஸ்டுகளின் கருத்தைத் தீர்மானிக்கின்றன. சோஷலிஸத்தைக் கூட்டாக நிர்மாணிக்கவேண்டுமென்ற நோக்கத்தால் பாட்டாளி வர்க்கத்தை ஆதரிக்கின்ற கட்சிகளுடனை தம் பிணைப்பைக் கம்யூனிஸ்டுகள் பலப்படுத்துகிறார்கள், அதேவேளையில் ஆட்சியை மீண்டும் கைப்பற்றுவதற்கு எத்தனிக்கின்ற கவிழ்க்கப்பட்ட பூர்ஷ்வாக்களை ஆதரிக்கின்ற கட்சிகளுக் கெதிராகவும் அவர்கள் தீவிரமாகப் போராடுகின்றனர்.

வெற்றிமிகு பாட்டாளி வர்க்கத்திற்கும் தூக்கியெறியப்பட்ட பூர்ஷ்வாக்களுக்குமிடையிலான வர்க்கப் போராட்டமும்கூட சோஷலிஸ மாற்றங்களுக்கான குட்டி பூர்ஷ்வா கட்சிகளின் விசுவாசம். ஆதரவு என்பவற்றைத் தீர்மானிக்கின்றன என்பதை அனுபவம் காட்டுகிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு எதிர்ப்புரட்சியாளரின் ஆதரவோடு பூர்ஷ்வாக்கள் ஒரு உள்நாட்டு யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட்டால் குட்டி பூர்ஷ்வா கட்சிகள் பெரும்பாலும் எதிர்ப்புரட்சியிலேயே பங்குபற்றுகின்றன. ரஷ்யாவின் இளம் சோவியத் குடியரசு, ஜெர்மனியின் பவேரியன் சோவியத் குடியரசு (1919), ஹங்கேரிய சோவியத் குடியரசு (1919)1 என்பவற்றிற்கு இவ் அனுபவமுண்டு.

உதாரணமாக, ரஷ்யாவில் லெனினுல் வழி நடத்தப்பட்ட போல்ஷ்வாக்குகள் குட்டி பூர்ஷ்வா கட்சிகளுடன் ஒத்துழைப்பை மேற் கொள்வதற்கு பெரும் முயற்சிகளையெல்லாம எடுத்ததோடு, பெருமளவு பொறுமையையும் சகிப்புத் தன்மையையும்கூட காட்டவேண்டியிருந்தது. 1917 நவம்பரில் நடந்த இரண்டாவது அனைத்து ரஷ்ய காங்கிரஸில் போல்ஷ்விக்குகள் எமது பெரும்பான்மையினுல் (650 பிரதிநிதிகளில் 400 கம்யூனிஸ்டு

---

1 பவேரிய, ஹங்கேரிய-சோவியத் குடியரசுகள் சிறிது காலமே இருந்தன, அவை வெளிநாட்டு, உள்நாட்டு எதிர்ப் புரட்சியால் முறியடிக்கப்பட்டன.

கள்) ஒரே கட்சி அரசாங்கத்தை அமைத்திருக்கலாம். ஆனால் அவர்களோ 101 உறுப்புனர் கொண்ட அரசியல் இடதுசாரி சோஷலிஸ புரட்சிவாதிகளுக்கு 29 ஆசனங்களையும் சிறுகட்சிகளுக்கு 10 ஆசனங்களையுமளித்தனர். எவ்வாறாயினும் இடதுசாரி சோஷலிஸ புரட்சிவாதிகள், போல்ஷ்வாக்குகளுடன் நேர்மையாக ஒத்துழைக்கவில்லை. அரசாங்கத்தில் சேர்ந்தவுடன் பெரும்பான்மையானோரின் கருத்துகளை உதாசீனம் செய்துவிட்டு தமது சொந்த அரசியல் வழியை மேற்கொள்ளலாயினர். இதிற் தோல்வியடையவே. அரசாங்கத்திலிருந்து விலகிப் பின்னர் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக ஒரு எதிர்ப்புரட்சியை உருவாக்கினர், எனவே சோவியத் ரஷ்யாவில் கூட்டரசாங்கமொன்றை ஏற்படுத்துகின்றமுறை அழிக்கப்பட்டதோடு ஒரே கட்சி முறையும் ஏற்படலாயிற்று. இது குறித்து லெனின் இப்படிக் குறிப்பிட்டார்''...சோவியத் கூட்டரசாங்கமொன்றை ஏற்படுத்தவே விரும்பினோம். சோவியத்திலிருந்து நாம் எவரையும் தள்ளிவைக்கவில்லை. அவர்களுக்கு எம்முடன் ஒத்துழைக்க விருப்பமில்லாவிட்டால் அது அவர்களுக்குத்தான் பாதிப்பாகும்.''1

உலக யுத்தம் (1939-1945) ஏற்பட்டதனால் உலக ஏகாதிபத்தியம் பலம் குன்றியதோடு சோஷலிஸம், ஜனநாயகத்திற்குச் சாதகமாக உலக சக்திகளின் சமநிலை மாறியது. இரண்டாவது—பாஸிசம் முறியடிக்கப்பட்டதனால் (இதற்கு சோவியத் யூனியன் பெரும் பங்களிப்பைச் செய்தது) தொழிலாள வர்க்கம், முழுத் தொழிலாள மக்களுக்கும் சாதகமாக பல ஐரோப்பிய நாடுகளில் வர்க்க சக்திகளுக்கிடையிலான உறவுகள்மாறின. மூன்றுவது—பாஸிசத்திற்கெதிரான போராட்டப் போக்கினால், கம்யூனிஸ தொழிலாளர் கட்சிகள் தலைமைப்பாத்திரம் வகித்த பல்வேறு ஜனநாயகக் கட்சிகளும், ஸ்தாபனங்களும் உள்ளடங்கிய தேசிய முன்னணி உருவாக்கப்பட்டது.

முறியடிக்கப்பட்ட பின்னரும்கூட பூர்ஷ்வாக்கள் முதலாளித்துவத்தைப் பாதுகாக்கலாம் என்ற நம்பிக்கையிலிருந்தனர். எனவே பலதடவைகள் சதித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. 1956ல் ஹங்கேரியிலும் 1968ல் செக்கஸ்லவாக்கியாவிலும் நடந்தது இதுதான். 1956ன் சிக்கலான நிலைமையைப் பற்றி ஹங்கேரிய சோஷலிஸ தொழிலாளர் கட்சி மத்திய கமிட்டி முதற் செயலாளர் ஜனோஸ் காடர் இப்படிக் குறிப்பிட்டார்: ''இங்கு ஏற்பட்ட அமைதியான சோஷலிஸப் புரட்சி ஹங்கேரிய பூர்ஷ்வாக்களுக்கு பல சாத்தியங்களைத் தந்தன: பறிமுதல்

1 வி.இ. லெனின், தொகுப்பு நூல்கள், பா: 26,பக் 270

களால் அவர்களின் பொருளாதார அடிப்படை ஒழிக்கப்பட்டாலும் பூர்ஷ்வாக்கள் தமது ''படைகளை''யும் முனைப்பான அரசியல் பாத்திரத்தையும் குறிப்பிடத்தக்க நேரம் காலத்திற்கு வைத்திருந்தனர். திட்டவட்டமான அபிவிருத்திகளால் 1945ஐத் தொடர்ந்து உடனடியாகவே நாம் பூர்ஷ்வா அரச இயந்திரத்தை அப்புறப்படுத்வில்லை (பொலிஸ் இராணுவத்தைத்தவிர) என்றதும் அதற்கு சாதகமாயிற்று என்பதும் உண்மையே.''

மாற்றங்கள் ஏற்படுகின்ற காலத்திலான கூரிய வர்க்கப் போராட்டத்தின்போது ஐரோப்பிய சோஷலிஸ நாடுகளின் பூர்ஷ்வாக்கள் பல சந்தர்ப்பங்களில் குட்டி பூர்ஷ்வா கட்சிகளை எதிர்க்கட்சியாக மாற்றி அதன் செல்வாக்கை பிற்போக்கான கட்சித் தலைவர்களின் மூலம் காப்பாற்றிக்கொள்ள முனைந்துள்ளனர். இந்த சிக்கலான நிலைமையில் ஜனநாயகக் கட்சிகளின் தத்துவார்த்த, அரசியல் பரிணுமம் இடம் பெறலாயின. எனவே தீவிரமான கம்யூனிஸ்டுகளின் ஆதரவோடும், ஒத்துழைப்போடும் ஜனநாயகக் கட்சிகளின் தலைமையிலுள்ள இடதுசாரி சக்திகள் வலதுசாரி மற்றும் பிற்போக்குச் சக்திகளை மட்டுப்படுத்தி படிப்படியாக அவற்றை அதிகாரத்திலிருந்தே அப்புறப்படுத்தின.

## வளர்ச்சியுற்ற சோஷலிஸ நிர்மாணம்

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்திற்கு மாற்றிச் செல்லுகின்ற கால கட்டத்தில் நகர, கிராமப்புற குட்டி பூர்ஷ்வாப் பகுதியினர் சமூக ரீதியில் மாறியதோடு ஜனநாயகக் கட்சிகளின் சமூக நோக்கங்கள் அரசியல் பாத்திரம் என்பனவும் மாறலாயின.

பல ஐரோப்பிய நாடுகளில் இன்றுள்ள ஜனநாயகக் கட்சிகளின் நடவடிக்கைகள் அதிகாரத்திற்கான போட்டியால் தம் பண்பைப் பெறவில்லை, மாறுக கம்யூனிஸ்டுகளின் தலைமையின் கீழ் தொழிலாள வர்க்கத்தினதும் முழுத் தொழிலாள மக்களினதும் அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதில் கம்யூனிஸ்டுகளுடன் ஒத்துழைப்பதனுலே தம் பண்பைப் பெறுகின்றன. மார்க்ஸிய—லெனினிய கட்சிகளின் முன்னணிப் பாத்திரத்தை ஜனநாயகக் கட்சிகள் அங்கேரிக்கின்றன.

வளர்ச்சியுற்ற சோஷலிஸ சமுதாயத்தை நிர்மாணிப்பதில் எல்லா தொழிலாள மக்களையும் ஈடுபடச் செய்கின்ற மார்க்ஸிய—லெனினிய கட்சிகளுக்கு ஜனநாயகக் கட்சிகள் ஒதுத்ழைப்பு வழங்குகின்றன.

நாம் உணர்ந்தறியக் கூடிய எதிர்காலத்தில் ஜனநாயகக் கட்சிகளின்பயன்பாட்டையும்மார்க்ஸிய—லெனிய கட்சிகள் அங்கீகரிக்கின்றன.

## வளரும் நாடுகளின் இன்றைய பிரச்னைகள்

ஜியோர்ஜி ஷஹாறு ஸாரேவ்
விஞ்ஞானக் கலாநிதி (சட்டவியல்)

# கலோனியலிஸத்தின் எச்சசொச்சங்களைக் கடந்து செல்லும் வழிமார்க்கம்

"...உலகப் புரட்சியில்" நிகழ்வுள்ள நிர்ணயமான போராட்டங்களில் தேசிய விமோசனத்தை கேட்டுப் போராடும் பெரும்பான்மை உலக மக்களின் இயக்கமானது முதலாளித்துவத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிராகத் திரும்புவதுடன், சில சமயம், நாம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மேலும் கூடுதலான புரட்சிகரப் பாத்திரத்தை வகிக்கும்."

—லெனின்

ஏறத்தாழ 70 ஆண்டுகளுக்கு முன்னர் லெனின் எழுதிய இந்த வார்த்தைகள் இன்றும் முக்கியத்துவம் குன்றுதவையாக உள்ளன. எதிர்கால மனிதகுல முன்னேற்றமானது தேசிய விமோசன இயக்கப் பரப்பில் நடைபெறும் நிகழ்வுப் போக்குகளிலேயே பெரிதும் நிர்ணயிக்கப்படும் என்பது நிராகரிக்கப்பட முடியாத உண்மையாகும். வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் சோஷலிஸ புரட்சியும் முதலாளித்துவ வளர்ச்சி குன்றிய நாடுகளில் தேசிய—ஜனநாயக அல்லது ஏகாதிபத்திய—எதிர்ப்பு புரட்சியுமே இன்றைய பிரதான போக்குகளாக உள்ளன.

---

1. ஜியோர்ஜி ஷஹாறு ஸாரேவ் டி. எஸ்ஸி அவர்களால் எழுதப்பெற்ற "மனிதகுலத்தின் சோஷலிஸ தலைவிதி" என்ற நூலிலிருந்து—மாஸ்கோ, 1978.

இவ்வாறு கூறும் போது, இறுதியில் தேசிய விமோசனத்துக்கு இட்டுச் செல்லக்கூடிய சமூக மற்றங்களை மேற்கொள்ளும் வரலாற்றுவழிப்பட்ட தலைவிதி இந்நாடுகளைச் சாரவில்லை என்று பொருளல்ல. சோஷலிஸம் வெற்றி பெறுவதற்கு முன்னர், ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் எதிர்காலத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்ட அடிப்படைத் தேசியப் பணிகளை அணுகுவது சாத்தியமானதா என்பதுதான் இங்குள்ள பிரச்னையாகும்.

## ஏகாதிபத்திய ஏகபோகங்களின் திட்டங்கள்

கடந்த சில தஸாப்தங்களில், ஏகாதிபத்திய நாடுகளின் ஆளும் வட்டாரங்கள் பொருளாதார ரீதியில் பின் தங்கியுள்ள நாடுகளின் அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்கான அவசியப்பாட்டினை மேலும் மேலும் உணர்ந்து வருகின்றன. இவ்விஷயத்தில் இவை சுயநலத் தேவைகளிலேயே வழி நடத்தப்படுகிற்றன. இந்நாடுகளில் சமூகரீதியிலுஞ் சரி, பொருளாதார ரீதியிலுஞ் சரி வளர்ச்சியை ஓரளவுக்கேனும் முடுக்கி விடாது முதலாளித்துவத்தின் நிலைகளை ஸ்திரப்படுத்திக் கொள்ளுவது அசாத்தியமானதாகவுள்ளது. அரசியல் ரீதியில் சோஷலிஸ நாடுகளின் பெருகிவரும் செல்வாக்கினுக்கும் சோஷலிஸ ஆதர்ஸத்தின் பால் வளர்ந்து வரும் ஆகர்ஷிப்புக்கும் இவை முகம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. இதனால் ''பகட்டுத்தனமான'' விவசாய சீர்திருத்தங்கள், உள்நாட்டுச் சந்தையை விரிவுபடுத்துதல் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துதல் முதலானவற்றின் வாயிலாக வளர்ச்சி குன்றிய நாடுகளை முதலாளித்துவமயப்படுத்துவதன் மூலம் தேசிய-ஜனநாயக, குறிப்பாக, சோஷலிஸப் புரட்சிகளைத் தடுத்து நிறுத்தும் நிர்ப்பந்தத்துக்கு ஏகாதிபத்தியம் ஆளாகியுள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதானால், தற்போது ஏகாதிபத்தியமானது ''முன்னேன்றம் என்ற துருப்புச் சீட்டினை''ப் பிரயோகிக்கிறது இதன் மூலம் முதலாளித்துவ அமைப்பு முழுமையையும் கட்டிக்காக்க முடியும் என நம்புகிறது.

அபிவிருத்திப் பிரச்னைகளுக்கு சோஷலிஸத்தினைக் காட்டிலும் முதலாளித்துவத்தினால் சரியான தீர்வுகளைக் காணுவது சாத்தியமானால், தமது தோல்வியை அங்கீகரித்துக் கொள்ளுவதைத் தவிர கம்யூனிஸ்டுகள் செய்தாகக் கூடியது வேறெதுவுமில்லை என்று மறைவின்றி ஒப்புக் கொண்டாதல் வேண்டும். இது ''சமூகமயப்படுத்துவது'' பற்றிய ஒரு மூடு மந்திரமல்ல மாறாக இது ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் அபிவிருத்திப் பிரச்னைகளின் பாலான கம்யூனிஸ அணுகுமுறைக்கு மூலாம்சங்களாகவுள்ள மக்களின் ஜீவாதாரப் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கான ஒரு தீர்க்கமான வினாவாகும்.

வளரும் நாடுகளின் நிலவரத்தை கணிசமான அளவுக்கு மேம்படுத்துவதில் அகநிலை வழிப்பட்ட நோக்கங்களும் ஏன் சில புறநிலைவழிப்பட்ட நலன்களும் இருக்குமிடத்தும்—அவசியமான பொருளாராத சாத்திய சௌகரியங்கள் அதன் வசம் இருக்குமிடத்தும்-முதலாளித்துவத்தினால் இப்பணியை நிறைவேற்றுவது அசாத்தியம் ஏனெனில் அது முதலாளித்துவத்தின் இயல்புக்கே எதிரிடையானது. இது தொடர்பாக தென் கொரிய தென் வியத்நாமிய உதாரணங்களை உற்று அவதானிக்கலாம் இந் நாடுகளின் மக்களுக்கு எதிராக ஆக்கிரமிப்பு யுத்தங்களை நடத்தி வந்த அமெரிக்க ஏகாதிபத்தியமானது முதலாளித்துவ வளர்ச்சி மார்க்கத்தின் ஆதாயங்களைத் துலாம்பரப் படுத்தும் நோக்குடன் இந்நாடுகளை சுபீட்சம் நிலவும் சொர்க்க பூமிகளாக மாற்ற முயன்றது. ஆனால், இம் முயற்சியின் பெறுபேறுகள் என்ன?

இந் நாடுகளில் கொண்டுவந்து கொட்டப்பட்ட அளப்பரிய நிதிவளங்கள், இவற்றின் தேசிய நலன்களுக்கு இயைந்த விதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்குமாயின், இந்நாடுகளால் கணிசமான அளவுக்கு அவற்றின் பொருளாதாரப் பின்தங்கலினின்றும் மீட்சி கண்டிருக்க முடியும். ஆனால் ஏகாதிபத்தியம் சாதித்துக் கொண்டதெல்லாம் ஒன்றே ஒன்றுதான்: அமெரிக்க நலன்களுக்கும், ஆயுதப் படைகளுக்கும் சேவகம் புரியும் உள்நாட்டு தரகர் குழாத்தையும், வர்த்தகர் குழாத்தினையுமே அது உருவாக்கியது. வியத்நாமிருந்து வெளியேற்றப்பட்ட அமெரிக்கர்கள் ஒரு ஸ்திரமற்ற பொருளாதாரத்தை விட்டேகிச் சென்றுள்ளனர்; அந்நிய ஏகபோகங்களின் தரகுப் பாத்திரத்தை வகிக்காது நாடு தனது சொந்த மார்க்கத்தில் வளர்ந்து முன்னேறுவதைச் சாத்தியமாக்கும் பொருட்டு இப்பொருளாதாரத்தைப் புனரமைக்கும் பணியினை நிறைவேற்றும் பொறுப்பு தற்போது மக்கள் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

கலோனியலிஸத்தின் எச்ச சொச்சங்களைத் துடைத்தெறிவதற்கான வேலைத்திட்டங்கள் பல வகுக்கப்பட்டு வருமிடத்தும், எலத்திரோனிக் தொழிற்துறை போன்ற மிக நவீன தொழிற்துறைகளை நிர்மாணித்து அவற்றினை பொருளாதார ரீதியில் பின்தங்கிய நாடுகளுக்குக் கைமாற்றும் கைங்கரியத்தில் ஏகபோகங்கள் ஈடுபட்டுள்ளன; அதிக செலவினங்களும், சுற்றுடலுக்குக் ஹானி ஏற்படவும் வகைசெய்யும் இவை இந்த வளரும் நாடுகளின் பொருளாதாரங்களுக்கு முதல்பட்சம் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் அல்ல. இந்த நவ-கலோனியல் தொழிற் பகுப்பு முறை செல்வதை, வறிய நாடுகளுக்கிடையிலான இடைவெளி மேலும் பெருகவும், முன்னேற்றம் தடைப்படவுமே வகைசெய்யும் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் சமூக—ஜனநாயகத்தின் செல்வாக்கு அண்மை ஆண்டுகளில் வேகமாகப் பரவி வேரோடியுள்ளது. சில சோஷலிஸக் கட்சிகள் (ஜப்பான், சுவீடன் முதலான நாடுகளின்) இந்நாடுகளினது மக்கள் தமது அரசியல், பொருளாதார சுயாதீனத்துக்காக ஆற்றும் போராட்டத்துடன் ஒருமைப்பட்டு நிற்கின்றன. இந்நாடுகளின் பொருளாதார, சமூக, கலாசார வளர்ச்சிக்குச் சாதமாக தம்மை இவை இனங்காட்டிக் கொண்டுள்ள பொழுதிலும், சமூக ஜனநாயகமானது, ஒரு முழுமையான இயக்கம் என்ற ரீதியில், புதிய நாடுகள் தீவிர புரட்சிகர மாற்றங்களை மேற்கொள்ளும் மார்க்கத்தில் அடியெடுத்து வைப்பதை தடுக்கும் வகையிலேயே தனது கொள்கையை வடிவமைத்துக் கொண்டுள்ளதுடன், இந்நாடுகளின் வளர்ச்சியை முதலாளித்துவ மார்க்கத்தில் வழிநடாத்தவே முயலுகின்றன.

## சோஷலிஸ திசையமைவு

மனிதகுலம் முகம் கொடுக்கும் இதர முக்கிய பிரச்னைகளைப் போலவே, அபிவிருத்திப் பிரச்னைகளுக்கும் சோஷலிஸத்தினலேயே தீர்வுகாண முடியும். இங்கு சோஷலிஸம் என்று கூறும் பொழுது, விஞ்ஞானபூர்வமான தத்துவத்தால் வழிநடாத்தப்படும் சோஷலிஸத்தையே குறிப்பிடுகின்றோம்.

பல நாடுகளில் (கொங்கோ மக்கள் குடியரசு, யேமன் மக்கள் ஜனநாயகக் குடியரசு. பெனின், அங்கோலா, மொஸாம்பிக், எதியோப்பியா முதலான நாடுகளில்) மார்க்ஸிஸ—லெனினிஸம் ஒரு உத்தியோகபூர்வ ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தத்துவமாக மாறி வருவது மட்டுமன்றி, பாடசாலைகளில் பயிற்றப்படும் பாடங்களில் ஒன்றாகவும் உள்ளது. இந்நாடுகளில் விஞ்ஞான சோஷலிஸக் கோட்பாடுகளின் அடிப்படையில் கட்சிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இது தேசிய விமோசன இயக்கம் பரிபக்குவம் பெற்று வருவதையும், புரட்சிகர ஜனநாயகப் பரப்பிலிருக்கக்கூடிய மிக முற்போக்கு சக்திகள் மத்தியில் பாட்டாளிவர்க்க தத்துவம் மேலும் மேலும் செல்வாக்குப் பெற்று வருவதையுமே பிரதிபலிக்கின்றது.

வளரும் நாடுகளிலுள்ள மக்களில் மேலும் மேலும் பல பகுதியினர் சோஷலிஸ மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டிய அவசியப்பாட்டினை உணர்ந்து வருகின்றனர். பல வளரும் நாடுகள் வேறுபட்ட சுலோகங்களின் கீழ் வேறுபட்ட வடிவங்களிலான ஆழமான சமூக மாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவது இதற்கு நல்ல சான்

ருக உள்ளது. இவ்வாறு, 1950—1970 காலகட்டத்தில் ஏறத்தாழ 15 ஆசிய, ஆபிரிக்க நாடுகள் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையினைத் தேர்ந்தெடுத்துள்ளன. இவ்வகையான நாடுகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்து வருகின்றது. சோவியத் நிபுணர்களினது மதிப்பீடுகளின் பிரகாரம், இந்நாடுகளினது மக்களின் தொகை 1,200 லட்சத்துக்கு அதிகமாகவும், அவர்கள் 120 லட்சம் சதுர கிலோமீட்டர்களாகவும் உள்ளன. ஆபிக்காவிலுள்ள நாடுகளிற் பல சோஷலிஸ திசையமைவினைக் கொண்ட வளர்ச்சி மார்க்கத்தினைப் பிரகடனப்படுத்தியுள்ளன. மேலும், பல நாடுகளில் (ஸாம்பியா, தோகோ முதலானவை) சோஷலிஸ திசையமைவினை தமது வளர்ச்சி மார்க்கமாக ஏற்றுக்கொள்ளும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்தப் போக்குகளின் வளர்ச்சி வாய்ப்புகள் எத்தகையனவாக இருக்கும்?

முதலாவதாக, இந்த மூன்று கண்டங்களிலுமுள்ள பெரும்பான்மையான நாடுகளில் சில சோஷலிஸ அம்சங்கள் தோன்றி, அவை காலப்போக்கில் மேலும் பெருகக் கூடும் என ஒருவர் கருத இடமுண்டு. பொருளாதாரத்தின் விரிவுபட்ட ராஜ்ய-முதலாளித்துவ துறைகள், அந்நிய மூலதனத்தின் மீதான கட்டுப்பாடு, பொருளாதார வளர்ச்சியைத் திட்டமிடும் நிலைக்கு மாறிச் செல்லுதல், தேசிய நிபுணர்களைப் பயிற்றுவித்தல், முதலீட்டு ஒதுக்கு நிதிகளைத் திரட்டும் நோக்குடன் ஒரளவு முற்போக்கு வழிப்பட்ட வரியிறுப்பு முறைகளைப் புகுத்துதல் முதலானவற்றை மேற்படி சோஷலிஸ அம்சங்கள் என்று குறிப்பிடலாம். இது சோஷலிஸ உருமலர்ச்சிக்கு மாறிச் செல்லுவதற்கான அடித்தளத்தை இடுவதற்கும் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில், ஏற்றவாறான அரசியல் தீர்மானங்களை இயற்றுவதற்கும் வகை செய்ய முடியும். நவீன மட்டத்துக்கு உற்பத்திச் சக்திகளை அதிகரிப்பது, சோஷலிஸத்துக்கான பொருளாயத அடித்தளத்தை இடுவது ஆகிய முக்கிய பணிகளானவை எதிர்காலத்தில் சாதிக்கப்பட வேண்டிய நீண்ட காலப்பணிகளாக இருக்கும் இப்பணிகள் நிறைவேற்றப்படும் வரை சோஷலிஸ வழிப்பட்ட பிரயத்தனங்கள் முழுமையான வடிவம் பெறுதனவையாகவே இருக்கும்.

ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் சமூக நிகழ்வுப் போக்குகளில் அவதானிக்கக் கூடிய அம்சமாக இருப்பது யாதெனில் அங்கு வளர்ச்சியும் முதிர்ச்சியும் பெற்ற தொழிலாளி வர்க்கமோ அல்லது அதனது அரசியல் கட்சிகளோ இல்லாதிருப்பது தான். ஆட்சியதிகாரத்தில் அமரும் புரட்சிகர ஜனநாயக கோஷ்டிகள் இராணுவ வட்டாரங்களையும் அறிவுத்துறையினையும், விவசாயிகள்

வட்டத்தையும் சார்ந்தவையாவே இருக்கின்றன. நல்ல பல இலட்சியங்களைக் கொண்டவர்களாகவும் புரட்சிக்கருத்துக்கள், மக்களின் நல்வாழ்வு, தேசிய சுபீட்சம் ஆகியவற்றினைப் பொறுத்து ஆத்ம அர்ப்பண உணர்வு மிக்கவர்களாகவும் இவர்கள் இருக்கின்ற பொழுதிலும் தோல்விகள் தவறுகள் முதலானவற்றின் வாயிலாகவுஞ்சரி, வெற்றிகரமான அல்லது விசனகரமான அனுபவங்கள் வாயிலாகவுஞ்சரி, முதிர்ச்சி பெற்று விஞ்ஞான சோஷலிஸ கருத்துக்களை பற்றி யொழுகுவதற்கு இவர்களுக்குச் சற்றுக் காலம் பிடிக்கும்.

சமூக நிகழ்வுப் போக்குகள் இன்னமும் திட்டவட்டம் பெறுமை, ஸ்திரப்பாடற்ற சமூக நிர்வாக முறைகள், தனித்தனிக் குழுக்களின் கைகளில்-சில சமயங்களில்-தனியொரு சர்வாதிகாரியின் கைகளில்-ஆட்சியதிகாரம் சிக்கியிருப்பது முதலாவை பாரிய அரசியல் அனர்த்தங்கள், சதிப்புரட்சிகள், இராணுவச் சதிகள் ஆகியன ஏற்படுவதற்கு ஏதுக்களாக உள்ளன என்பதும் இங்கு கவனிக்கத்தக்க உண்மையொன்ருகும். இத்தகைய சூழ்நிலைமைகளில் சோஷலிஸ சுலோகங்கள் (சொத்துக்களை தேசிய மயப்படுத்துவது போன்றவை) சொந்த அல்லது குலவழிப்பட்ட நோக்கங்களைப் பூசி மெழுகுவதற்கான சாதனங்களாக மாறுவதற்கும் இடமுண்டு.

முதிர்ச்சி பெற்ற முதலாளித்துவக்கட்டத்தில் வாழ நேரிடாத நாடுகளில் சோஷலிஸ வளர்ச்சிக்கு, குறிப்பாக, சித்தாந்த துறையில் சாதகமான சூழ்நிலைமைகள் உள்ளன. ஏனெனில், இந்நாடுகளினது மக்களின் பிரக்ஞைகள் பூர்ஷுவா உலக நோக்கினுல் ஆழமாகப் பாதிக்கப்படாதுள்ளன. அதே வேளையில் மரபு வழிப்பட்ட சமூகவழக்கு வழிப்பட்ட காரணிகளும் உளவியல் வழிப்பட்ட காரணிகளும் நாடளாவிய திட்டமிடல், பாரிய அளவிலான எந்திரமயமாக்கப்பட்ட பண்ணைகளை நிறுவுவது போன்ற முக்கிய பணிகளின் நிறைவேற்றத்துக்குச் சில சந்தர்ப்பங்களில் முட்டுக்கட்டைகளாக அமைவதுமுண்டு.

விமோசனமடைந்த நாடுகளில் பெரும்பான்மையானவை தற்போது தேசிய மறுமலர்ச்சிக் கட்டத்தினூடாகப் பயணிக்கின்றன. கலோனியல் அடக்கு முறையினின்றும் அவை வென்றெடுத்த விமோசனம் இயல்பாகவே தேசிய பிரக்ஞையையும் தேசபக்த உணர்வுகளையும் விழித்தெழச் செய்துள்ளது. கண்டமளாவிய ஒருமைப்பாடு வளருகின்ற அதே வேளையில் ஏகாதிபத்தியத்துக்கும் கலோனியலிஸத்துக்கும் எதிராக மூன்று கண்டங்களும் கூட்டாகச் செயற்படும் போது கண்டங்கள் மத்தியிலான ஒருமைப்பாடும் வளர்ந்து வலுப்படுகிறது. இத் தோற்றப்பாடுகள் யாவும் முற்றிலும் தர்க்கவியல் வழிப்பட்டவையும் முற்போக்கானவையுமாகும்.

ஆனால், இவ்வகையில் சில எதிர்மறை அம்சங்களும் இருக்கவே செய்கின்றன. முன்னர் மந்தமடைந்து கிடந்த பழமைவாதப் போக்குகள் மீண்டும் தலைதூக்குகின்றன. இது முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதை அல்லது சோஷலிஸ திசையமைவு தோற்றப்பாட்டின் பிரத்தியேக அம்சங்களில் ஒன்றினை—பின்போதல்கள், ஏற்ற இறக்கங்கள், நெளிவு சுழிவுகள் ஆகியவற்றின் சாத்தியப்பாட்டினை—விளக்குவதாயுள்ளது.

ஆனால், முதலாளித்துவத்துக்குப் புத்துயிர் அளிக்க அவ்வப்போது நடைபெறும் முயற்சிகளைக் கொண்டு சோஷலிஸ எத்தனிப்புகள் தோல்வி கண்டுவிட்டன என்று கூறிவிடமுடியாது; ஏனெனில் இந்த எத்தனிப்புகள் எப்போதும் தமது முத்திரைகளைப் பதித்துவிடத் தவறுவதில்லை.

## பிரச்னைக்கு தீர்வு காணுவதற்கான வாய்ப்புகள்

தேசிய விமோசனப் புரட்சியானது அதனது இலட்சியப் பயணத்தின் முதல் கட்டப்பணியினை பூர்த்திசெய்யும் நிலையை நெருங்கியுள்ளது: ஒரு சில விதிவிலக்குகளைத் தவிர, எல்லா மக்களும் தமது சொந்த ராஜீய யோக்யதையை ப்பெற்றுள்ளனர்; மேலும் பலர் பொருளாதார சுயாதீனத்தை எய்தும் பிரயத்தனங்களில் ஈடுபட்டுள்ளனர். பல்வேறுபட்ட சித்தாந்த சூத்திரங்களும் பல தரப்பட்ட அரசியல் நிலைபாடுகளும் இருக்குமிடத்தும், மக்களின் விமோசன இயக்கம் சோஷலிஸத்துக்கு மாறிச் செல்லும் ஒரு தெளிவான திசையமைவினைக் காணக்கூடியதாக உள்ளது; விஞ்ஞான சோஷலிஸத்தின் கௌரவமும் செல்வாக்கும் மேலும் வளர்ந்தோங்குகின்றன.

வளரும் நாடுகளின் மக்கள் தற்போது முகம் கொடுக்கும் பிரச்னைகளுக்கு சோஷலிஸத்தினால் மட்டுமே தீர்வுகாணமுடியும் என நாம் வலியுத்துகின்ற அதே வேளையில், அது பொருளாதார, சமூக, கலாசார வளர்ச்சிப் போக்கின் சில கட்டங்களை மக்கள் ஒரே எட்டில் தாண்டிவிடத் துணை செய்யக்கூடிய ஒரு மந்திரக்கோல் என்று கூறிவிடவும் தயாராக இல்லை. நாம் கூறுவதெல்லாம் இதுதான்: திட்டமிட்ட உற்பத்தி, ஏகாதிபத்திய சூறையாடலை இல்லாதொழிப்பது, விரயத்துக்கு வகை செய்யும் பூர்ஷுவா நுகர்வு வழக்கினை விட்டொழிப்பது சோஷலிஸ அமைப்பினை நிறுவுவது தொடர்பான இதர மாற்றங்களை மேற்கொள்ளுவது முதலானவையே நாட்டின் வளங்களை ஒருமுனைப்படுத்தவும், பொருளாதாரப் பின்தங்கலிருந்த விடுபடும் காலத்தை அண்மிக்கச் செய்யவும் துணை செய்யும்.

சோவியத் அறிஞர்களின் கருத்துப் பிரசாரம், 20 ம் நூற்றுண்டில் இறுதி இரு தஸாப்தங்களிலும், 21ம் நூற்றுண்டின் முதல் தஸாப்தங்களிலும் பூரண சுயாதீனத்துக்கான வளரும் நாடுகளின் போராட்டம் தீவிரம் பெறும். சிக்கலான, எமது காலத்தின் தலையாய பணிகளில் ஒன்றுன இந்தப் பணியின் நிறைவேற்றத்துடன் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான விமோசனமடைந்தநாடுகளின் போராட்டம் தீவிரம் பெறும் எனவும். சமூக வளர்ச்சிப் பாதையினைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக மிகவும் கசப்பான சர்வதேச மோதுதல்களும், பரபரப்பான நிலவரங்களும் உருவாகும் எனவும் எதிர்பார்க்கலாம்.

கென்னடி நிகொலயேவ்

# ஆயுதப் போட்டி— சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு தடை

உலகின் இராணுவத்திற்கான நேரடிச் செலவு ஆண்டுதோறும் நாற்பதாயிரம் கோடி டாலர்களை எட்டியுள்ளது. ஆயுத உற்பத்தித் தொழிலில் சுமார் ஆறு கோடிப் பேர் ஈடுபட்டுள்ளனர். அணு ஆயுதக் குவிப்பானது, உலகஜீவராசிகளத்தனையையுமே நிர்மூலமாக்கிவிடும் மட்டத்தையும் மிஞ்சிவிட்டது. ஆயுதப்போட்டி, இராணுவவாதத்தின் அதிகரிப்பு என்பனவெல்லாம் பல நாடுகளின் பொருளாதாரங்களை உருக்குலைக்கின்றன, விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பறித்துக்கொள்கிறது, பெறுமதிமிக்க மூலப்பொருட்கள், அடிப்படை உற்பத்திகள் என்பவற்றைக் கபளீகரம் செய்துவிடுகிறது.

இன்றைய நவீன உலகில் மூன்றில் ஒருவருக்கு அடிப்படை சுகாதார பராமரிப்பு கிடைப்பதில்லை, ஐந்தில் ஒருவருக்கு கல்வியறிவில்லை, எழில் ஒருவர்க்கு போதிய உணவில்லை என்பதைப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. பொருளாதார நெருக்கடி, வேலையின்மை, பணவீக்கம் என்பவற்றால் இலட்சோப லட்சம்பேர் பாதிக்கப்படுகின்றனர். ஒரு குண்டு வீச்சு விமானத்தின் அடக்கவிலை பதினைறு வைத்தியசாலைகளுக்கும், ஒரு நீர்மூழ்கிக் கப்பலின் அடக்கவிலை நானூறு பள்ளிக் கூடங்களுக்கும் இணையானதாகும். பொதுக்கல்வி, சுகாதார சேவை, உணவு விநியோகம், குடிமனை வசதி போன்ற வளர்முக நாடுகளின் எரியும் பிரச்னைகளை ஈடுசெய்வதற்காகும் செலவு ஆயுதங்களுக்காகச் செய்யப்படும் 10 நாள் உலக செலவுக்கு இணையானதாகும்; அதாவது 1200 கோடி டாலர்களாகும். மலேரியாவை ஒழிப்பதற்கு ஒரு நவீன விமானந்தாங்கிக் கப்பலுக்காகும் செலவைவிட மிக குறைவாகவே தேவைப்படும்.

பணவீக்கம், நாடுகளின் கடன் மற்றும் வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறை அதிகரிப்புக்கு ஒருகாரணம் இரா

ணுவச் செலவினங்களே என்று பூர்ஷ்வா நிபுணர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பல ஆண்டுகளுக்கு முன்புவரை அமெரிக்காவில் இராணுவ ஆராய்ச்சிகளுக்கான நபர்விகித செலவு பொதுச் கல்விக்காகும் நிதியைவிட 76 மடங்கு அதிகமும் சுகாதார பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டதைவிட 150 மடங்கு அதிகமுமாகும். இராணுவ பட்ஜெட்டுக்கு ஒதுக்கப்படுகின்ற ஒவ்வொரு 100 கோடி டாலர்களினுலும் சராசரி 11500 க்கும் மேற்பட்ட வேலைகளை அமெரிக்கர்கள் இழக்கின்றனர்.

இராணுவ உற்பத்திகள், ஏகபோகங்களுக்கு அபரிமிதமான ஆதாயங்களை உறுதி செய்கிறது. ஏனைய உற்பத்திகளிலிருந்து கிடைப்பதைவிட ஆயுத உற்பத்தியால் கிடைக்கும் வருவாய் 70 சதவீதத்தை விட அதிகமாகும். முதலாளித்துவ உலக செய்திகளின்படி அமெரிக்காவின் மிகப்பெரிய 100 இணையங்கள் 1977ல்மட்டும் சுமார் 4000 கோடி டாலர்களை நிகர இலாபமாகப் பெற்றன.

மீளத் திரும்பிவருவதென்பது மிகச் சிக்கலானதுதான். ஆனுல் அது ஈற்றில் மக்களுக்கு தரக் கூடிய வசதிகள் அதனுலேற்படும் கஷ்டங்கள் துன்பங்களையெல்லாம் மிகமிக இலகுவாக்கிவிடக் கூடியதே.

ஏ. கால்கின் டி.எஸ்ஸி (வரலாறு)

# 1970ம் ஆண்டுகளில் நவபாஸிசம்

நவபாஸிச ஸ்தாபனங்களுட்பட நானுவித பிற்போக்கான ஸ்தாபனங்கள் இன்று மிகத் தீவிரமடைந்துள்ளன. முதலாளித்துவத்தின் பொருளாதார, சமூக' அரசியல் போக்குகளின் நெருக்கடி மிக்க தன்மைகளின் பலாபலனே இதுவாகும்.

பூர்ஷ்வாக்களின் கருத்தின்படி முதலாளித்துவ உலகின் சில பகுதிகளிலும் தேசிய விமோசன இயக்க பிராந்தியத்திலும் இன்று நிலைமை மிக அபாயகரமாகியுள்ளது. இப் பகுதிகளில் அதிகார வர்க்கத்தில் ஒரு பிரிவினர் தொழில்களுக்கு மிகக் கஷ்டமான சட்டதிட்டங்களை ஏற்படுத்துகின்ற போக்கு அதிகரித்துவருகிறது. ஒரு புறத்தில் அரசு எடுக்கும் தீர்மானங்களில் பொதுமக்கள் செல்வாக்கைக் குறைக்கவேண்டும் அல்லது முற்றுக அகற்றவேண்டுமென்றும் நிர்வாக நடவடிக்கைகள் மேல் மட்டத்திலிருந்து கட்டுப்படுத்தப்படும் ஒரு ''அரசியல் குழு'' விடம் ஒப்படைக்கப்படவேண்டுமென்றும் அவர்கள் வாதாடுகின்றனர். அல்லது அவர்களுக்கு நெருக்கமான ஸ்தாபனங்களாலேயே பொதுவாக அவ்வித முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைக் கடந்தகால அனுபவங்கள் காட்டுகின்றன.

## சமூக அடிப்படை

பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளிலும் சில வளர்முக நாடுகளிலும் பூர்ஷ்வா நாடாளுமன்ற அரச எந்திரங்கள் ஆற்றலற்றவை என்பது நிரூபணமாகியுள்ளது. சில அரசுகளின் ஸ்திரமின்மையினுலும், வேறு சில அரசுகள் உள்நாட்டு பிணக்குகளின் நிர்ப்பந்தத்தால் முனைப்பான நடவடிக்கைகளை எடுக்கமுடியாது ஆற்றலின்றி இருப்பதனுலும் இன்னும் பல அரசுகள் நீதியைத்தகர்ப்பது மற்றும் ஊழல் தன்மையாயிருப்பதனுலும் இக் கூற்று

மெய்ப்பிக்கப்படுகிறது. பொதுவாகவே பூர்ஷ்வா கட்சிகளை ஆதரிக்கின்ற பொது மக்களின் சில பிரிவினரிடையே இலகுவான தீர்வுகளினூடாக 'அமைதியை'ப் பாதுகாக்கக் கூடிய ஒரு 'பலமான அரசு'க்கானதோர் ஆசையைத் தூண்டிவிட்டுள்ளது.

இவ்வித ஆர்வத்தினாலேற்படும் முழுப் பலனையும் அடைபவர்கள் தீவிர வலதுசாரிகளேயாவர். இவர்கள் தமது தத்துவார்த்த பிரசாரத்தில் நீண்ட காலமாகவே குறிப்பாக கம்யூனிஸ விரோத சோவியத் விரோத சுலோகங்களை மேற்கொண்டுவருகின்றனர், இவ்விதத்தில் இன்றைய நவ பாஸிசமானது முந்திய பாரம்பரிய பாஸிசத்திலிருந்து ஒருசிறிதே வித்தியாசப்படுகிறது. நவ-பாஸிச பிரசாரத்தில் சோவியத் அச்சுறுத்தல் என்ற கண்டுபிடிப்போடு கம்யூனிஸ சதித்திட்டம் பற்றிய கட்டுக் கதைகள் நேர்த்தியாகப் பின்னப்பட்டுள்ளன. இந்த வார்த்தை ஜாலங்களும் பூர்ஷ்வா அரசியல்வாதிகளிடமிருந்தும் யுத்தத்தால் கீர்த்திபெற விரும்புவோரிடமிருந்தும். இரவல் பெற்றவையே. சோவியத் யூனியனுடனும் ஏனைய சோஷலிஸ நாடுகளுடனும் ஒத்துழைப்புகளைப் பேணுவதும் ஆபத்தானதே என்றும் நவ பாஸிஸ்டுகள் கூறுகின்றனர் அதனால் தான் தங்கள் நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளையும் ''மாஸ்கோவின் ஏஜன்டுகள் என்றும் குரூரமாகத் தாக்குகின்றனர். முடிவமைதி சோஷலிஸ நாடுகளுக்குமட்டுமே ஆதாயமானதோர் மாயத்தன்மைமிக்க கொள்கை எனக் கூறி அதைத் தாக்குவதன் முக்கிய காரணம் இதுவேயாகும். அதே வேளையில் முழு முதலாளித்துவ அமைப்பையும் பாதுகாப்பதற்காக ''கம்யூனிஸ அச்சுறுத்தலை'' எதிர்த்துப் போராடுவதில் மிக நம்பகமானவர்கள் தாங்களே என்றும் நவ பாஸிஸ்டுகள் கூறுகின்றனர்.

தற்போதைய நிலைமைகளில் தமக்கு மிக அண்மையிலுள்ள சிறு சொத்துடைமையாளர்கள், சமூகக் குழுக்களின் மனப்போக்கிலேற்பட்டுள்ள மாற்றங்களுக்கு ஈடு செய்வதைப்போல நவ பாஸிஸ்டுகள் ஏனைய சில கொள்கைகளையும் அபிப்பிராயங்களையும் வேறு வித சொற்பிரயோகங்களால் குறிக்கின்றனர். இவ்விதத்தில்தான் கம்யூனிஸ விரோதபோக்கானது, இன்று சர்வதேசரீதியில் அச்சுறுத்தலைத் தூண்டுகின்ற பயங்கரவாதம் என்ற வடிவத்தையும் பொதுவாக ''இடதுசாரி அதிதீவிர நடவடிக்கைகள் பற்றிய அச்சத்தையும் கொண்டுள்ளது. ''அதிதீவிர—பரட்சிவாத'' குழுக்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் இவற்றிற் சில அரசியல் கொள்ளைக்காரத்தனத்திற்கும் இட்டுச் சென்றன) முழு இடதுசாரி முகாமினதும் 'உண்மையான' நோக்கங்களென்றும் காட்டப்படுகிறது. முதலாளித்துவ மற்றும் சில வளர்முக நாடுகளிலுள்ள சமூகப் பிணக்குகளின் மேலும் மோசமான நிலைமைகள் 'இரகசியதிட்ட தத்துவத்தை' உறுதிசெய்கிறதென்றும் விபரிக்கப்படுகிறது. ''சட்டத்தினதும் ஒழுங்கி

னதும் சக்தி''களானது தீவிரவாதிகளை ஒடுக்கவும் ''இடதுசாரி இரகசிய திட்டங்களை'' முறியடிக்கவும் கூடியதாயிருக்கவேண்டுமென பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கும் மேலாக ''சட்டத்தினதும் ஒழுங்கினதும் சக்திகள் எற்ற பதம் இராணுவம், பொலிஸ், வலதுசாரி மற்றும் தீவிர வலதுசாரி குழுக்கள் (நவ பாஸிஸ்டுகளுட்பட) என்பவற்றையே குறிப்பாக உணர்த்துகிறது.

தேசிய விமோசன இயக்கங்கள் மீது இவ்வித அபிப்பிராயங்களையே நவ பாஸிஸ்டுகள் வெளிப்படுத்துகின்றனர். காலனித்துவ ஒடுக்குமுறை மற்றும் பொம்மை ஆட்சிகளைத் தாங்கிப்பிடிக்கவும் அத்துடன் கடினமான எல்லையற்ற ஆட்சிமுறைகளைப் புகுத்தவும்கூட புதிதாக விடுதலையுற்ற நாடுகளில் சமூக. அரசியல் வளர்ச்சியிலான பிரச்னைகளை இராணுவ சக்தியின்மூலமே தீர்க்க முடியுமென்றும் நவ பாஸிஸ்டுகள் நம்புகின்றனர்.

'வேற்றுநாட்டு'' மற்றும் குடியேறியுள்ள தொழிலாளர்களை நசுக்குவதற்கும் மேலாக பாஸிசத்தின் தனிப்பண்பாக எப்போதுமுள்ள இனக்குரோதத்தையும், இன ஆதிக்கவாதத்தையும் மேற்கொள்வதற்கும் மேலாக நவ பாஸிஸ்டுகள் முன்னாள் காலனிகளின் மக்களுக்கு—விசேடமாக உலக மார்க்கட்டிற்கு அபூர்வ மூலப்பொருட்களைப் பிரதானமாக விநியோகிக்கும் நாடுகளுக்கு விரோதத்தை ஏற்படுத்துவதற்குத் தம்மாலானதனைத்தையும் செய்து வருகின்றனர்.

## நவ பாஸிஸ தந்திரங்கள்

யுத்தம் முடிந்தவுடனேயே தீவிர வலதுசாரி இயக்கங்களிடையே இரு பிரதான போக்குகள் ஏற்பட்டன. ஒன்று—1930, 1940ஆம் ஆண்டுகளில் பாஸிஸ இயக்கங்களிலும் யுத்தம் மற்றும் ஏனைய குற்றச் செயல்களில் ஈடுபட்ட பாஸிஸ ஆட்சிகளிலும் ஒன்றிணைந்திருந்த ஸ்தாபனங்களாகும். சிற்றளவினதாயிருப்பினும் இந்த ஸ்தாபனங்கள் பாஸிசத்தைக் களைந்தெறிந்ததால் ஏற்பட்ட அதிர்ச்சியினின்றும் முற்றாக விடுபடவில்லை. எனவே அவற்றின் செயலாற்றல்கள் வரையறுக்கப்பட்டதாகவே இருந்தன. எவ்வாறாயினும் பூர்ஷ்வா சட்டதிட்டங்களை அத்துமீறி 'நேரடி நடவடிக்கை'யை அடியொற்றிய விநோதமான ''நடவடிக்கைகளை'' ஏற்படுத்திக்கொண்டன.

இதற்குச் சமானமாக இன்னொருவித அதிதீவிர வலதுசாரி ஸ்தாபனங்கள் பலம்பெறலாயின. இவை கடந்த காலத்தை மட்டுமல்ல 'எதிர்காலத்தை'யும் உற்றுநோக்கின. தற்கால முதலாளித்துவத்தின் கீழ் ஏற்படுகின்ற சமூக, அரசியல் மாற்றப் போக்குகளிலிருந்து ஆதாயம் பெறுவதில் முக்கிய அக்கறை காட்டின. இவ்வித ஸ்தாபனங்கள் கூடியவரை தம்மையே விட்டுக்

கொடுக்கச் செய்யும் தத்துவங்களையும், முக்கியஸ்தர்களை யும் விட்டுவிலகியிருக்கலாயின. பழமையையே விரும்பும் பகுதியினரையும் கட்சிகளையும் தம்பக்கம் வென்றெடுப் பதையே தம் கடமையின் முக்கிய அம்சமாக இவை கொண்டிருந்தன. இவையும் இவைபோன்ற ஸ்தாபனங் களும் தமது தந்திரங்களைப் படிப்படியாகவே நிதர்சன மாக்கிவந்தன. பூர்ஷ்வா நாடாளுமன்றத்துவத்தின் ''சதுரங்க விளையாட்டுச் சட்டதிட்டங்களை'' ப் பிரயோ கிப்பதற்குச் சந்தர்ப்பமளிப்பதால் இவர்கள் தம் ''சட்ட முறை'' கோட்பாடுகளைத் தெளிவாகவே முன்வைத்தனர்.

''பதட்டநிலை தந்ரோபாய''யத்தின் மூலவர்கள் இராணுவத்திற்கு பிரதான பாத்திரத்தையளிக்கின்றனர். பதட்டநிலை ஒரு குறிப்பிட்ட கட்டத்தை எய்தியவுடன் தீவிரவாதிகளுடன் இணக்கம் காணும் இராணுவத் தலை வர்கள் பொது ஒழுங்கையும் அமைதியையும் பாதுகாக்கி றோம் என்ற போர்வையில் ஏனைய அதிகார குழுவினரை மிக எளிதில் கவிழ்த்து விடுகின்றனர். அத்துடன் அவர் கள் தமது சொந்த ,'போராட்டக் குழுக்''களைப் பயிற்று விக்கவும், ஆயுதபாணிகளாக்கவும் இராணுவத்திற்குள் ளேயேயுள்ள தமது ஆதரவாளர்களைப் பாவிக்க முயற் சிக்கின்றனர்.

தீவிர இடதுசாரிகளின் அதிதீவிர நடவடிக்கைகளுக் கும் 'பதட்டநிலை தந்திரோபாயம்' இடமளிக்கிறது. ''சிவப்புகள்'' மீது சந்தேகத்தை ஏற்படுத்துகின்ற விதத் திலும் பல சந்தர்ப்பங்களில் தீவிரவாதிகள் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குத் திட்டமிடுகின்றனர். எனினும் ஆத் திரமூட்டல் நடவடிக்கைகளிலல்லாமல் தமது ஒழுங்கான நடவடிக்கைகளில் தீவிர இடதுசாரி சூதாடிகள் ஈடுபட் டாலும் கூட அவர்கள் ''பதட்டநிலை தந்திரோபாய''த் தைக் கையாள்வோரின் வலைக்குள்ளேயே உண்மையில வீழ்ந்துவிடுகின்றனர்.

ஜனநாயக கிளர்ச்சிப் பாதையை மேற்கொண்டுள்ள பல ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் 'பதட்டநிலை தந்திரோ பாய'த்தினர்க்கு அடிப்படையானதோர் 'தகர்த்தெறியும் கொள்கை' தேவையாயிருக்கிறது. எனவே இவர்களின் பிரதான குறி பொருளாதார. அரசியல் துறைகளில் குழி பறிப்பு வேலைகளைச் செய்வதேயாகும். பாவனைப் பொருட் கள் தட்டுப்பாட்டைச் செயற்கையாய் ஏற்படுத்துதல், மூலதனத்தைத் திட்டமிட்டு வெளிநாடுகளுக்கனுப்புதல், அரசியல் ரீதியாக முற்போக்குத் தலைவர்களை விட்டுக் கொடுப்புச் செய்ய முனைதல், பரந்த ரீதியில் இனவாத, தேசிய அல்லது மதப்பிணக்குகளை தூண்டுதல், பிரிவினை வாத இயக்கங்களை ஏற்படுத்துவதை ஊக்குவிப்பது என்பன அவற்றிற் சிலவாகும்.

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

## சோஷலிஸம்
## தத்துவமும் நடைமுறையும்

இம் மாத சஞ்சிகையைப் பெற பின்வரும் முகவரிக்கு எழுதுங்கள்:

சோஷலிஸம் தத்துவமும் நடைமுறையும்
சோவியத் தூதரக தகவல் பிரிவு,
27, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்த,
கொழும்பு-7.

பிரகதி-அச்சகம் 93, மாளிகாகந்தை றேட், கொழும்பு-10,